விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, நட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்
THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.
இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, நட்டாரத் தெரு, கொழும்பு

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஆடு ஐப்பசி மீ 6உ வியாழக்கிழமை — Colombo, October, 23, 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 7 | இதழ் 142

பர்மாவுக்குப் பூரணசுதந்திரம்; இலங்கைக்கு பிரிட்டன்கீழ் பூரணப் பொறுப்பாட்சி

இலங்கை-பிரிட்டன் சமரசப் பேச்சு நடைபெறுகிறது

பார்லிமெண்டில் மன்னர் பிரசங்கம்

இரும்புக் கைத்தொழிலை தேசிய மயமாக்க, லார்டு சபை முட்டுக்கட்டை தடுக்கப்படும்

புதிய அரசாங்கம் ஏற்படுத்த கமியூனிஸ்ட் கட்சி அறிக்கை

லண்டன், அக். 21

இன்று பிரிட்டிஷ் பார்லிமெண்டின் இரு சபைகளும் கூடியிருந்த கூட்டத்தை ஆரம்பித்து மன்னர் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:—

காமன்ஸ சபைக்கும் லார்டு சபைக்குமுள்ள சம்பந்தத்தைக் குறித்து 1911-வது வருடத்திய பார்லிமெண்ட் சட்டம் திருத்தப்படும். (காமன்ஸ சபை நிறைவேற்றப்படும் பண மசோதாவைத் தவிர மற்ற மசோதாக்களை லார்டு சபை இரண்டு வருட காலத்திற்கு தாமதப்படுத்த முடியும். லார்டு சபையின் இந்த அதிகாரத்தை மூன்று மாத முதல் 6 மாத காலம் வரை மட்டும் தாமதப்படுத்தக் கூடியவாறு திருத்தப்படும். தொழிற் கட்சி அரசாங்கத்திற்கு 5 வருட ஆயுள்தானுண்டு. இரும்பு உருக்குக் கைத்தொழிலை தேசிய மயமாக்க தொழிற் கட்சியார் முனைந்திருக்கிறார்கள். அடுத்த கூட்டத்தில் இது சம்பந்தமாக மசோதா கொண்டுவரப்படும். ஆகவே லார்டு சபைக்கு இரண்டு வருட காலம் அதை தாமதப்படுத்தினால் அதற்குள் அடுத்த பொதுத் தேர்தல் வந்துவிடும். இதை முன்னிட்டு இப்பொழுது அந்த கால அளவைக் குறைக்க சர்க்கார் திருத்த மசோதா கொண்டுவருவார்கள்.)

பர்மாவுக்கு பூரண சுதந்திரம் வழங்கும் மசோதா இக்கூட்டத்தில் கொண்டு வரப்படும். இப்பொழுது இலங்கைக்கும பிரிட்டனுக்குமிடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகளின் பயனாக கூடிய சீக்கிரம் இலங்கைக்கு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குட்பட்ட பூரண பொறுப்பாட்சி வழங்கும் மசோதாவும் உங்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும்.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒரு மசோதாவும் கொண்டு வரப்படும். உணவுப்பொருட்களையும் மூலப்பொருட்களையும் இறக்குமதி செய்ய வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்யப்படும். ஜப்பான் சமாதான உடன்படிக்கை செய்வதால் தூர கிழக்கு நாடுகளுக்கு சுபீட்சமேற்படு மாதலால் அதை கூடிய சீகிரம் முடிக்க ஏற்பாடுகள் செய்யப்படுமென்று நம்புகிறேன் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கிடையே நடைபெறும் கலப்பு மணங்கள் சம்பந்தமான பிரஜா உரிமையை நிர்ணயம் செய்யவும் ஒரு மசோதா கொண்டுவரப்படும். உலகையே ஆட்டி வரும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சர்க்கார் தங்களாலியன்ற சகல முயற்சிகளையும் செய்வார்கள். முதலாவது ஏற்றுமதியை அதிகரித்து கடனைச் சரிக்கட்ட பிரதானமாக முயற்சிகள் செய்யப்படும். உள்நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் மற்ற ஏற்றுமதிக்கு வேண்டிய கைத்தொழில் பொருட்களின் உற்பத்தியைப்பெருக்கவும் தீவிர முயற்சி செய்யப்படும். பிரிட்டிஷ் படங்களை அதிகமாக உற்பத்தி செய்து விநியோகிக்க திருத்த மசோதா கொண்டு வரப்படும். கைத்தொழிகளில் ஈடுபடும் பொருட்டு ராணுவத்தினர் எண்ணிக்கை கூடிய அளவுக்குக் குறைக்கப்படும். இங்கிலாந்து, வேல்ஸ கிரிமினல் சட்டங்களிலும் திருத்தங்கள் செய்யப்படும்.

மன்னர் தன் பிரசங்கத்தில் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க சர்க்கார் எடுத்துக் கொள்ளப்போகும் சட்ட நடவடிக்கைகள் பற்றியும் ஐரோப்பிய புனருத்தாரணத்தில் பிரிட்டன் ஈடுபடுவது பற்றியும்பேசினார்.

லார்டுகள் எதிர்ப்பு

மன்னர் பிரசங்கத்தின் மீது விவாதம் ஆரம்பமாயிற்று. பார்லிமெண்டு சட்டத் திருத்தம் பற்றி லார்டுகளிடையே பலமான எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது தொழில் கட்சி அரசாங்கத்திற்கு தாங்கள் முட்டுக்கட்டை போட்டதிலலை யென்றும் தங்கள் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவது முறையல்ல வென்றும் லார்டு ஸாலிஸபரி பேசினார்.

திரு. அந்தோனி ஈடன் காமன்ஸ் சபையில் மன்னர் பிரசங்கம் பற்றி பேசியபோது லார்டு சபையைத் திருத்தியதற்கு சர்க்காருக்கு அதிகாரமில்லையென்றும் அப்படிச் செய்வது ஒழுங்கல்லவென்றும் கூறினார். மன்னர் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற விஷயங்களைபற்றி பலமாகக் கண்டித்துப் பேசியதுடன், கமியூனிஸ அகிலத்தைப்பற்றியும் அது பிரான்ஸிலும் இத்தாலியிலும் சோஷியலிஸ்டுகளுக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்து வருவதுபற்றியும் சுட்டிக் காட்டி பிரிட்டன் தனது ஜனநாயகக் கொள்கையைக் கைவிட்டுவிடலாகாதென்று எச்சரித்தார். 200 வருடகாலத்திற்குள் நடக்காத கோர சம்பவங்கள் இந்தியாவிலும் சைனாவிலும் நடைபெறுவதாகவும் ஏகாதிபத்திய சலுகை வரியை பிரிட்டன் கை விடலாகாதென்றும் கூறினார்.

கமியூனிஸ்ட் கட்சி அறிக்கை

லண்டன், அக். 21

முற்போக்கான இடதுசாரிக் கட்சி அரசாங்கத்தை பிரிட்டனில் நிறுவவேண்டுமென்று கோரி பிரிட்டிஷ் கமியூனிஸ்ட் கட்சி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இந்த அறிக்கை 'டெய்லி வொர்க்கர்' பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது. அறிக்கை தெரிவிப்பதாவது:— பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கம் தற்போதுள்ள அரசாங்கத்தை முற்போக்குடையதாக மாற்றியமைத்தாலன்றி தொழிலாளர்கள் சம்பளம் குறைக்கப்பட்டு கஷ்டப்படுவார்கள். ஏகாதிபத்திய மாஜி அரசாங்கங்கள் செய்த வாக்குறுதிகளையும் பட்ட கடன்களையும் நிறைவேற்ற இப்பொழுதுள்ள தொழிற்கட்சி பிற்போக்கு அரசாங்கம் பணத்தை விரையம் செய்கிறது. அது தவிர இந்தஅரசாங்கம் அமெரிக்க கைத்தொழில் முதலாளிகளுடன் உறவாடி உலகை இரு கட்சிகளாகப் பிளந்து புதிய யுத்தத்திற்கு அடிகோலுவதான திட்டங்களைக் கையாண்டு வருகிறது.

மந்திரி சபைக் கூட்டம்

அரசாங்க ஊழியர் தொழிற் சங்க உரிமை

[அரசியல் நிருபர்]

கொழும்பு, அக். 22

நேற்று காலை 9-30 மணிக்கு மந்திரி சபையினரின் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குத் தொழிற் சங்க உரிமை வழங்குவது சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டதென அறியப்படுகிறது.

அடுத்து வரும் இரண்டு வாரத்துக்குள், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் சில இலங்கைப் பிரதிநிதிகளுக்கு மிடையில், இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவது சமபந்தமாகத் தற்காலிகமாக பெறப்பட்ட சில ஒப்பந்தங்களின் தலையங்கங்கள் சம்பந்தமாக மந்திரி சபையினர் ஆலோசிப்பார்களென அறியப்படுகிறது.

கூடிய சீக்கிரத்தில் பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு மந்திரி காமன்ஸ் சபையில் இலங்கை மசோதாவைக் கொண்டுவருவாராம்.

இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து, பர்மாவுக்கு முன்னதாகக் கிடைக்குமென்றும் இங்கு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. பர்மா சுதந்திரம் பெறும் நாள் 1948ம் ஆண்டு ஜனுவரி மாதம் 6-ம் தேதியாகும்.

இலங்கை ஒரு சொல்லப்பட்ட கால எல்லையின் பின்பே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து பிரிந்துகொள்ள முடியுமாம் என்றும் அறியப்படுகிறது.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரி பிரச்னை

நவம்பர் முதல் தேதி ஸ்தல ஸ்தாபான மந்திரி விஜயம்

பிரதிநிதி திரு செல்வநாயகம் உடன் செல்வார்.

கொழும்பு, அக். 22

நவம்பர் மாதம் முதலாம் தேதி சுகாதார ஸ்தல ஸ்தாபான மந்திரி திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்வார்.

முதலாந்தேதி சாயந்தரமும். இரண்டாந்தேதி காலையிலும் மந்திரியவர்கள் காங்கேசன்துறையில் தங்குவார்.

காங்கேசன் துறை ஆஸ்பத்திரி பிரச்னை சம்பந்தமாக மந்திரியவர்கள், காங்கேசன் துறைப் பிரதிநிதி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கேள்விப்படி, காங்கேசன் துறை வாசிகளின் அபிப்பிராயங்களைக் கேட்பதற்காகவும் நேரில் விஷயத்தை அறியவுமே செல்லுகின்றார்.

காங்கேசன்துறை வாடிவீட்டில் அல்லது இராணுவ ஆஸ்பத்திரியில்தான் மந்திரியார் தங்கியிருந்து பலரையும் சந்திப்பார் என்று அறியப்படுகிறது.

திரு. செல்வநாயகமும் மந்திரியுடன் செல்லுவார்.

அமெரிக்காவுக்கு அதிக இலங்கை ரப்பர்

செப்டம்பரின் ஏற்றுமதி

கொழும்பு, அக் 23

இலங்கையிலிருந்து செப்டம்பர் மாதத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட 22,014,037 ருத்தல் ரப்பரில் அமெரிக்காவுக்கு 15,084,040 ருத்தல் ரப்பர் ஏற்றுமதிசெய்யப்பட்டுள்ளது

இதற்கு அமெரிக்கா 8,354,671 கொடுத்துள்ளது. பிரிட்டன் ரூ. 1,717,612க்கு 1,779,550 ருத்தல் ரப்பரையும், கானடா ரூ. 217,043 க்கு 436,800 ருத்தல் ரப்பரையும் வாங்கியுள்ளன.

தேர்தல் நீதிபதி

டிசம்பரில் விசாரணை ஆரம்பம்

கொழும்பு, அக். 23

தேர்தல் ஆட்சேபவழக்குகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் நீதிபதியாக நீதிபதி திரு. வின்ட்ஹாம் நியமிக்கப்பட்டுள்ளார். முதன் முதலில் இவர் கண்டி, கம்பளை தேர்தல் ஆட்சேப வழக்கை விசாரணை செய்வார். இந்த ஆட்சேபமனுக்களை இவர் கொழும்பில் டிசம்பரில் விசாரணை ஆரம்பமாகும்போது எடுத்துக் கொள்வார்.

உணவுக் கட்டுப்பாடு சோதனை நிலையங்கள்

இருப்பதால் பலனில்லை; உடனே எடுத்துவிடுக

உணவு மந்திரிக்கு திரிகோணமலைப் பிரதிநிதியின் கோரிக்கை

கொழும்பு, அக். 22

திரிகோணமலையில் பல இடங்களிலுமுள்ள உணவுக் கட்டுப்பாட்டுச் சோதனை நிலையங்களை உடனே எடுத்துவிடுமாறு திரிகோணமலைப் பிரதிநிதி திரு. எஸ். சிவபாலன் அவர்கள் புதிய உணவு மந்திரியைக் கேட்டுள்ளார்.

திரு சிவபாலன் இச் சோதனை நிலையங்களை எடுத்துவிடுவதற்கு பின்வரும்காரணங்களை காட்டி உணவு மந்திரிக்கு வற்புறுத்தியுள்ளார்:-

(1) "கள்ளத்தனமாக நெல்லைக் கொண்டுசெல்பவர்களைத் தடுக்கும் முகமாகவே அகில இலங்கையிலும் இந்த உணவுக்கட்டுப்பாட்டுச் சோதனை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இப்பொழுது இச் சோதனை நிலையங்கள் பொதுஜனங்களுக்குத் தொந்தரவையே கொடுக்கின்றது உதாரணமாக சோதனை நிலையங்களுக்கு நாட்டுப்பக்கத்தில் ஒரு கொத்து அரிசி ஐம்பது சதமாக விற்கப்படுகிறது. ஆனால் இச் சோதனை நிலையங்களுக்கு நகர்ப்பக்கங்களிலோ ஒரு கொத்தரிசி ஒரு ரூபா எழுபது சதமுதல் இரண்டு ரூபா வரையில் விற்கப்படுகின்றது.

(2) இந்த மாதிரி விலை உயர்த்தி விற்கப்படுவதற்குக் காரணம் வயல்களுக்கும் பட்டினத்திற்கும் இடையேயுள்ள உணவுக் கட்டுப்பாட்டுச் சோதனை நிலையங்களே.

(3) எத்தனை சோதனை நிலையங்கள் அதிகமாகவிருக்கின்றனவோ அத்தனை பங்கு விலை அதிகரிக்கின்றது.

(4) மிகுந்த செலவில் வயற் செய்கை செய்யும் விவசாயி இத்தகைய நிலைமையால் பெறும் பணம் கட்டுப்பாட்டு விலையிலும ஒரு சொற்பம்தான் அதிகமாகும். ஆனால் வாங்கி உண்பவர்களோ அதிகப் பணத்தைக் கொடுத்து, தாம் ஊரரிசி சாப்பிடுவதாகத் திருப்திபடுகிறார்கள். இத்தகைய நிலைமையால் விவசாயிக்காவது சாப்பிடுபவர்களுக்காவது இச் சோதனை நிலையங்களால் ஒரு பலனுமிலலை.

(5) இச் சோதனை நிலையங்களை எடுத்துவிடுவதால் உள்நாட்டு நெல் வாங்கும் திட்டத்திற்கு ஒரு அபாயமும் ஏற்பட்டுவிடாது. உணவு நிலைமையையும் அது பாதித்துவிடாது.

(6) வரி கொடுப்பவர்களுக்கும் அதிகச் செலவு இருக்க மாட்டாது.

"காலந் தாழ்த்தி இன்னும் இந்நிலையங்களை தொடர்ந்து திரிகோணமலையில் வைத்திருப்பது சரியல்லவென்றே நான் நினைக்கின்றேன்".

லக்ஷ்மணபுரியில் நேரு அசோக மரக் கன்று நாட்டினார்!

சாம்ராஜ்யத்திலிருந்து இந்தியா விலகுவது பற்றி லார்டு அடிஸன்

காஷ்மீருக்கு பாக்கிஸ்தான் எச்சரிக்கை

லக்ஷ்மணபுரி, அக். 21

இந்தியா பிரதம மந்திரி பண்டித நேரு தனது புத்திரி இந்திரா காந்தியுடனும், தனது அந்தரங்க காரியதரிசி உபாத்தியாயாவுடனும், இந்தியா போக்குவரத்து மந்திரி ராபி அஹம்மது வித்வையுடனும் 19-ம் தேதியன்று இங்கு விஜயம் செய்திருந்தபோது லட்சக்கணக்கான ஜனங்கள் அவருக்கு அமோகமான வரவேற்பளித்தார்கள். அவர் இங்கு நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு டில்லிக்குப் பயணமானார். அவர் லக்னோவில் கவர்னர் மாளிகைக்கு வந்தபோது அவர் விஜயத்தின் ஞாபகார்த்தமாக அசோக விருட்சத்தின் கன்றை நாட்டி வைக்கும்படி கவர்னர் சரோஜினி தேவி கேட்டுக் கொண்டார். சர்க்கார் மாளிகைத் தோட்டத்தில் பண்டித நேரு அசோக விருட்சக் கன்றை நட்டினார்!

ரஷிய ஸதானிகர் நியமனம்

மாஸ்கோ, அக். 21

திரு. கே. வி. நொவிகவ் இந்தியாவில் சோவியத் ரஷியாவின் ஸ்தானிகராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

காஷ்மீருக்குப் பாக்கிஸதான் எச்சரிக்கை

புதுடில்லி, அக். 21

காஷ்மீர சமஸதான மாஜி பிரதம மந்திரி பண்டித ராமச்சந்திர பாக் மூட்டை முடிச்சுகளுடன் குடும்ப சகிதமாக லண்டனுக்குப் புறப்படும் சமயம் சமஸதான அதிகாரிகள் அவரைக் கைது செய்தனர். காஷ்மீரத்தை பாக்கிஸதான் வசம் ஒப்புவிக்க அவர் ஜனுப் ஜின்னாவுடன் செய்த சதிகளுக்கு ருசு இருக்கிறதாம்.

இப்பொழுது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதம மந்திரி மேஹசந்த் மஹாஜன் மிகவும் கெட்டிக்காரர். அவர் காஷ்மீர் இந்திய யூனியனில் சேருவதை ஆதரிக்கும் மனப்பான்மையுடையவர். அவர் கைக்கொள்ளும் கொள்கையால் அபாயம் நேரிடுமென்று பாக்கிஸதான் பிரதமர் லியாகத் அலிகான் எச்சரிக்கை செய்து தந்தி அனுப்பியிருக்கிறார். இந்தியா சமஸதான இலாகா மந்திரி சர்தார் படேலும், பாதுகாப்பு மந்திரி பலதேவ் சிங்கும் புதன்கிழமை விமானத்தில் கத்தியவாருக்குச் சென்று அன்றே டில்லிக்குத் திரும்புவார்கள்.

அகதிகளுக்கு உணவு, உடை முதலிய வசதியளிக்க இந்திய சர்க்காருக்கு மாதம் நாலரைக் கோடி ரூபாய் செலவு. இவ்வருஷத்திற்குள் 40 கோடி செலவாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹைதராபாத் சமஸ்தானத்துடன் புது டில்லியில் இன்னும் இந்திய சர்க்கார் சமரசப்பேச்சு நடத்திவருகிறது.

சேனட் சபை அங்கத்தினர் நியமனம்

11 பேர்களை கவர்னர் நியமித்திருக்கிறார்

இன்னும் 4 பேர்கள் நியமிக்கப்படுவர்

கொழும்பு, அக். 22

இலங்கை அரசியல் சட்டம் 10-வது பிரிவின்படி கவர்னர் கீழ்க்கண்ட 11 பேர்களை சேனட் சபை அங்கத்தினர்களாக நியமித்திருக்கிறார்:—

(1) திரு. சி. குமாரசாமி
(2) மிஸ். சி. ஸி. கூரே
(3) திரு. சி. ஏ. எம். டி. சில்வா
(4) திரு. சி. ஏ. கார்டினர்
(5) சர் ஒலிவர் இ குணதிலகா
(6) ஹாஜி சர் முகம்மது மாக்கான் மரைக்கார்
(7) டாக்டர், எல். ஏ. ராஜபக்ஸ
(8) முதலியார் ஏ. பி. ராஜேந்திரா
(9) டாக்டர் வி. ஆர். ஹொக்மன்
(10) திரு. ஜே. ஏ. டி. வ்க்ரோரியா
(11) திரு. இ. ஏ. பி. விஜயரத்ன

மீதமுள்ள 4 பேர்களின் பெயர்கள் கூடிய சீக்கிரம் அறிவிக்கப்படும்.

பப்ளிக் சேர்வீஸ் கமிஷன் மூவர் நியமனம்

கொழும்பு, அக். 22

இலங்கை அரசியல் சட்டம் 58 (1) வது பிரிவின்படி கவர்னர் கீழ்க்கண்டவர்களை பப்ளிக் சேர்வீஸ் கமிஷன் அங்கத்தினர்களாக நியமித்திருக்கிறார்:-

(1) திரு. சி. என். பேஜட் (தலைவர்)
(2) சர். ஆர். சரவணமுத்து
(3) டாக்டர். ஏ. எம். டி சில்வா

லண்டன் கிழக்கிந்திய சங்கத்தில் சர் டி விநாம் பேசியபோது இந்தியாவுக்கும் பாக்கிஸதானுக்கு மேற்பட்டுவரும் பகை அந்த இரு டொமினியன்களுக்கும் ஆபத்தை விளைவிப்பதுடன் உலகத்திற்கும் அபாயத்தை உண்டாக்குமென்று கூறினார். தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப்போல இந்தியாவும் ரஷியாவும் அனுதாபங் காட்டுவதாகத் தெரிவித்தார்.

கராச்சி வந்திருக்கும் லார்டு ஹடிஸன் இந்தியா பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து விலகுமென்று தெரியவில்லை என பத்திரிகா நிருபரிடம் கூறினார்.

ஐக்கிய மாகாண கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் பி. சி. ராய் இன்று நியூயார்க் பத்திரிகையில் எழுதியுள்ள கட்டுரையில் உலகை இரு கூறாகப் பிரிக்கும் கட்சியினர் மனிதனுக்குப் பதிலாக ஸதாபனங்களை முன் வைத்துப் போராடுகின்றனர் என்று தெரிவித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ச, நட்டாரத் தெரு, கொழும்பு. போன்: 3411.

சர்வதிந்து ஷூ ஐப்பசி மீ 6 உ
வியாழக்கிழமை

ஆசிய சமாதானத்திற்கு இலங்கையின் கடமை

பிரிட்டிஷ்-பர்மிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை அடுத்த வருடம் ஜனுவரி மாதத்தில் நடை முறையில் கொண்டு வரப்படும். இதுகாலபரியந்தம் கிழக்கு நாடுகளில் ஆதிக்கம் செலுத்தி வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இன்று நல்லெண்ணத்தையும், தாராள மனப்பான்மையையும் காட்ட முனைந்து நிற்பது ஒரு சுபசூசகமாகும். பழையன கழிந்ததும் புதியன புகுந்ததும் யாவராலும் வரவேற்கத் தக்கதே. ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது செலுத்தி வந்த ஆதிக்கத்தைத் தானாக அகற்றி விட்டது இதுவரை சரித்திரத்தில் நாம் அறியாததொன்றாகும். இந்தியாவில் கையாண்ட முறையை பர்மாவிலும் பிரிட்டிஷார் அனுஷ்டிக்க விருப்பது விசேஷமாக போற்றப்படத்தக்கதே.

கிழக்கு நாடுகளில் பிரிட்டிஷ் ஆட்சியையிட்டு சரித்திரகாரர் என்ன தீர்ப்பைக் கூற விருப்பினும், பிரிட்டிஷார் இங்கிருந்து வெளியேறிய முறையை வாழ்த்தவே செய்வார்கள். ஆதிக்கஞ்செலுத்தும் ஒரு நாட்டை விட்டு எந்த நாடும் மகிழ்புடன் வெளியேறியதே கிடையாது. ஆயின் பிரிட்டிஷார் தங்களுக்குரிய கூர்ந்த மதி நுட்பத்தை உபயோகித்து ஒற்றுமை உடன்படிக்கைகள் வாயிலாக ஏகாதிபத்தியத்தைக் கலைக்க மனந்திரும்பியுள்ளார்கள். இது அவர்களைக் கண்ணியத்துடன் வெளியேறச் செய்துள்ளது. பிரெஞ்சுக்காரரும், டச்சுக்காரரும் இதையே தாங்கள் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளில் உபயோகித்தால் நன்று என வற்புறுத்துகிறோம்.

பர்மா தனிப்பட்ட சுதந்திர நாடாகப் பிரகடனஞ் செய்யப்படவிருப்பினும், பிரிட்டனுடன் ஒற்றுமையாக விருக்குமென்றே தக்கின் நு கூறுகிறார் இரண்டாவது மகா யுத்தத்தில் ஏராளமான பர்மியர்கள் மடிந்துள்ளார்கள். பல இடங்கள் சுட்டு எரிக்கப்பட்டும வேறு விதமாகவும் நாசமாக்கப்பட்டன ஆகவே பர்மா புனர் நிர்மாணிக்கப்படுவதற்கு பண உதவியும், இயந்திர சாதன உதவியும், பல திறப்பட்ட நிபுணர்களின் உதவியும், வேண்டும். இத்தகைய உதவிகளை பர்மா எங்கு வேண்டி நிற்குமென்பது சொல்ல முடியாது. ஆயின் இவற்றில் சிலவற்றிற்காகுதல் ரங்கூன், லண்டனையே எதிர்பார்க்க வேண்டி நேரிடும்.

இந்தியாவிலுள்ள அரசியல் வேற்றுமைகளோ, சமய வேற்றுமைகளோ பர்மாவில் கிடையாது. ஆனால் ஜப்பானிய ஆக்கிரமிப்பின் பின்பு பர்மாவில் படுகொலைகளும், பயங்கரக் கொள்ளைகளும் நடைபெறவே செய்கின்றன. சமூக பாதுகாப்பு சற்றேனும் அங்கு கிடையாதென்றே நாம் கூற வேண்டியிருக்கிறது. மந்திரிகளே சுட்டுக் கொல்லப்படுகிறார்கள் என்றால் வேறு என்ன தான் அங்கு நடைபெறாது! இதற்குஉடனே முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது பர்மியர் கடமையாகும்.

பர்மா தன் அண்டை நாடுகளான இந்தியாவுடனும், பாக்கிஸ்தானுடனும் நல்லுறவு ஏற்படுத்த முயற்சிகள் செய்துவருவதாக அறிகிறோம். ஆசியாவில் சமாதானம் நிலவுவதற்கு இது வேண்டியதொன்றாகும். அத்துடன் இலங்கையும் தன்னை நல்ல அயலவனாகவே இருக்க வேண்டுமென்று பர்மா கருதுகிறது. இலங்கைக்கும் அடுத்த வருடத்தில் ஏதோ சாம்ராஜ்ய நாட்டிற்கு உட்பட்ட பூரண பொறுப்பாட்சி கொடுப்பதாக பிரிட்டன் வாக்குறுதியளித்திருக்கிறது. இந்து சமுத்ரத்தில் உள்ள நாடுகள் யாவும் பாதுகாப்பிற்கு தமக்கு யுள்ள நாடுகளின் உதவியையே பெரிதும் வேண்டி நிற்பார்கள். ஆகவே இந்தியா, பாக்கிஸ்தான், பர்மா, இலங்கை ஆகிய நான்கு நாடுகளும் ஒற்றுமையாகவே இருக்க வேண்டும். இந்தோனேஷியாவை ஆக்கிரமித்த டச்சுத் துருப்புகள் வந்த கப்பல்களுக்கும், டச்சு விமானங்களுக்கும் துறைமுகமும், விமானத் தளமும் கொடுத்ததுபோன்று திரு. சேனநாயக்கா காரியங்கள் செய்ய வொண்ணாது என எச்சரிக்கிறோம். பிரிட்டிஷாரின் கண் திரிகோணமலை விமானத் தளத்தில் தான் இழுக்கப்பட்டிருக்கிறது. திரு. சேனநாயக்கா, பிரிட்டிஷாருடன் ஏற்படுத்தஇருக்கும் உடன்படிக்கையில் தென்கிழக்கு ஆசியாவில் அபாயத்தை தருவிக்கும் செயல்கள்எவற்றையும் செய்யமாட்டாரென எண்ணுகின்றோம்.

சென்னை அரசாங்க ஊழியர் வேலைநிறுத்தம்

நவம்பர் 14ல் வாக்கெடுப்பு

வேலூர், அக். 20

இம் மாகாணத்தின் எல்லா ஜில்லாக்களையும்சேர்ந்த கெஜட் பதிவில்லாத ஊழியர்கள் சங்கங்கள் பல சர்வீஸ சங்கங்கள் இவற்றின் பிரதிநிதிகள் கூட்டம் 18-ம் தேதி வேலூர் லக்ஷ்மணசாமி முதலியார் டவுன் ஹாலில் நடந்தது. சென்னை சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ கே ஜகதீச அய்யர் தலைமை வகித்தார்.

கெஜட் பதிவில்லாத ஊழியர் குறைகளை விண்ணப்பிக்க இச்சங்கம் பலமுறை முயற்சித்தும் சர்க்கார் பேட்டி அனுமதிக்க மறுத்தது பற்றி புகார் செய்யப்பட்டது.

கூட்டத்திற்கு நிருபர்கள் அநுமதிக்கப் படவில்லை. நீண்ட நேரம் ஆலோசனை நடந்தபிறகு நவம்பர் மீ 14-ம் தேதி மாகாணம் பூராவிலும் ஸ்டிரைக் செய்யலாமாவென்பதைத் தீர்மானிக்க வோட் எடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

கண்ணாடி உற்பத்தியில் புரட்சி!

வளைக்கலாம்; அறுக்கலாம்; ஆணிகள் அடிக்கலாம்!

நியூயார்க், அக். 20

கண்ணாடிகளை ரம்பத்தினால் அறுக்கலாம்; ஆணிகள் அடிக்கலாம்; ரப்பர் மாதிரி வளைக்கலாம்-என்றால் நீங்கள் நம்பமாட்டீர்கள்! ஆனால் அமெரிக்காவில் விசேஷ ஆராய்ச்சிகள் நடத்தி ஆயிரம் விதத்தில் உபயோகப்படக்கூடியவாறு கண்ணாடிகளை உற்பத்தி செய்கிறார்கள். வருங்காலத்தில் இதன் உபயோகம் பிரமாதமாகயிருக்கப்போகிறது. எல்லாம் கண்ணாடி மயமாகி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கோஹினூர் வைரம்

லண்டன், அக். 20

உலகத்திலேயே மிகச் சிறந்ததான கோஹினூர் வைரம் மீண்டும் லண்டன் டவரில் வைக்கப்பட்டிருக்கிறது. 1939ல் இது ஒருவருக்கும் தெரியாத இடத்திற்கு ரகசியமாக எடுத்துச் செல்லப்பட்டிருந்தது.

இதைக் காண எனக்கு இன்று சந்தர்ப்பம் வாய்த்தது. பிரிட்டிஷ் ராஜ குடும்ப நகை வியாபாரி ஸ்ரீமான் இவ்வைரம் இந்தியாவுக்கு திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது என்று கூறினார். இவ்வளவு அழகான வைரத்தை இந்தியா பாக்கிஸ்தானிடையில் வெட்டி துண்டிப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகுமென்று ஸ்ரீமான் கூறியதை நான் ஏற்றுக்கொண்டேன். யுத்தத்தின் போது இது எங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்தது என்பதைக் கூற ஸ்ரீமான் மறுத்து விட்டார்.

ஐக்கிய நாடுகளின் புதிய கொடி

நியூயார்க், அக். 21

நீல நிறத் துணியில் ஐக்கிய நாடுகளின் சின்னம் வெண்மை நிறத்தில் பொறிக்கப்பட்ட ஒரு புதிய கொடியை ஐக்கிய நாடுகளின் கொடியாக நேற்று நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் ஆரம்ப கூட்டத்தில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. (ராய்ட்டர்)

தமிழர் கலாச்சாரத்தின் தனிச் சிறப்பு

தமிழ் நாடு தனி மாகாணமாக வேண்டும்

தமிழர் முன்னேற்றத்திற்கு, தமிழர் இனம் தனித்து இலங்குவது அவசியம்

சென்னை மாகாண மேல் சட்டசபையில் சர்க்கார் தீர்மானம் வெற்றி

சென்னை, அக். 21

சென்னை கவுன்ஸிலில் (இரண்டாவது சட்டசபையில்) பாஷாவாரி மாகாணத் தீர்மானததைசர்க்கார்கட்சித் தலைவர் டாக்டர் டி. எஸ் எஸ். ராஜன் கீழ்க்கண்டவாறு பிரேரித்தார்

"இந்திய அரசியல் திட்டத் தயாரிப்புக்கு பாஷாவாரி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிப்பது அவசியமான தோர் தேவையென இந்தக் கவுன்ஸில் கருதுகிறது எனவே அரசியல் நிர்ணய சபையானது தன் அடுத்த கூட்டத்தில் இப்பிரச்னையைப் பரிசீலனை செய்து இந்தியமாகாணங்களைப் பாஷாவாரி அடிப்படையில் கணக்கிடவேண்டுமென இந்த கவுன்சில் அபிப்பிராயப்படுகிறது. முக்கியமாக தமிழ் நாடு, கேரளம், கர்நாடகம் ஆந்திரம், ஆகியவற்றை புது அரசியலில் தனி மாகாணங்களாகக் கணக்கிடவேண்டும். இந்த மாகாணங்களின் எல்லைகளை நிர்ணயிக்க எல்லைக் கமிஷன் அல்லது கமிஷன்கள் அல்லது தகுதியுள்ள வேறு சாதனங்களை அமைத்து தரவேண்டுமென்பது இக் கவுன்ஸிலின் அபிப்பிராயமென்பதை அரசியல் நிர்ணய சபைக்கு அறிவிக்குமாறு சர்க்காருக்கு சிபார்சு செய்யப்படுகிறது"

இத்தீர்மானம் விவாதிக்கப்பட்டு நிறைவேறியது.

பாஷாவாரி மாகாண தீர்மானத்தை மேல் சபையில் பிரேரித்து டாக்டர் ராஜன் பேசியதாவது:—

சில மாதங்களுக்கு முன் இதேபோன்ற தீர்மானததை அசெம்பிளி நிறைவேற்றியது நிர்வாக சௌகரியத்துக்காக பாஷாவாரி அடிப்படையில் மாகாணங்களைப் பிரிக்கும் திட்டத்திற்கு காங்கிரஸ் கட்டுப்பட்டிருக்கிறது.

ஆந்திர மாகாணம்

10 வருஷ காலமாக ஆந்திர மாகாணக் கிளர்ச்சி நடந்து வந்திருக்கிறது. இப்போது அந்தக் கோரிக்கையை எதிர்ப்பார் இல்லை. தமிழ் ஜில்லாக்களும் தமிழ் மாகாணம் கோருகின்றன. ஆந்திர தமிழ் மாகாணங்களின் எல்லையை, எல்லை கமிஷன்தான் நிர்ணயிக்கவேண்டும். தமிழரின் கலாச்சாரம் தனித் தன்மை வாய்ந்தது. அதுபோலவே ஆந்திர கலாச்சாரமும்.

இவ்விஷயத்தை ஒத்திப்போடாமல் அ. நி. சபையின் அடுத்த செஷனிலேயே கவனிக்க வேண்டுமென்று தீர்மானம் கூறுகிறது.

கேரளம், கர்னாடகம்

கேரள கர்னாடக மாகாணங்கள் வேண்டுமாவென்பதுவிவாதிக்கப்படவேண்டிய விஷயம். அப்பகுதியினர் அண்டை பிரதேசங்களின் அரசியல் உரிமையை மீறாத முறையில் தனி மாகாணம் அமைக்க முடியுமா என்பது சிந்தனைக்குரிய விஷயம். மலபார், திருவாங்கூர், கொச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள மலையாளம் பேசும் மக்கள் ஒன்றுபட முடியுமா என்பதுபற்றி எல்லைக் கமிஷனே தீர்மானிக்கவேண்டும். சென்னை பம்பாய் மாகாணங்களில்உள்ள கன்னடப் பாஷையினர் ஒன்றுபட முடியுமா என்பதையும் தீர்மானிக்கவேண்டும்.

தவிர நிஜாம் ராஜியம் வேறு இருக்கிறது. தாம் அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்டதாக நிஜாம் அறிவித்துவிட்டார். அங்கு ஆந்தரர், கர்னாடகர், மராட்டியர் ஆகியோரே பெரும்பான்மையினர். நிஜாம் ராஜ்யத்தை பாஷாவாரி அடிப்படையில் பிரித்தால் பிறகு அந்த ராஜ்யம் எங்கிருக்கும்?

இவ்விதம் பாஷாவாரிப் பிரிவினைகள் செய்வதால் தேசிய ஒருமைக்கு வலிமை ஏற்படுமா என்பதை தீர்மானிக்கவேண்டும். வெறும் பிரிவினையா. நிர்வாகப் பிரிவினையா, கலாச்சாரப் பிரிவினையா என்பதையும் தீர்மானிக்கவேண்டும். தனிப்பட்ட யூனிஸ்டுகள் தாமும் முன்னேறுவதுடன் தேசத்தன் ஒருமையைப் பலப்படுத்தவும் முடியும் என்றே கருதுகிறேன். பல விஷயங்களையும் பரிசீலனை செய்யவேண்டும்.

யூதர்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள்

பனுமாக் கொடி பறக்க விடுகின்றனவா?

லண்டன், அக். 20

பாலஸ்தீனில் சட்ட விரோதமாக நுழையும் யூதர்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களில் பல பனுமா தேசியக் கொடியைப் பறக்கவிடுகின்றன. இதைத் தடுக்கும் நோக்கமாக லண்டனில் உள்ள பனுமா மந்திரி பனுமா புறப்பட்டுள்ளார். பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி பெவினின் வேண்டுகோளாலேயே அவர் அங்ஙனம் செல்கிறார்.

"துஷ்ட நோக்குடன் சில அமெரிக்க ஆங்கில கிரேக்க முதலாளிகள் சில பனுமாக் கம்பெனிகளை ஆரம்பித்து, சட்ட விரோதமான இம் மனித வர்க்கத்தால் கொழுத்து வருகிறார்கள். அதைஎதிர்த்துப்போராட நான் தயார்" என பிரஸ்தாப மந்திரி குறிப்பிட்டார்.

[ராய்ட்டர்]

பேர் முடாவில் சூறுவளி

ஹமில்டன் பேர்முடா, அக். 20

மணிக்கு 100 மைல் வேகத்தில் வீசிய பெரும் புயற் காற்றின் பயனாக மின்சார, டெலிபோன் கம்பிகளும் போக்குவரத்தும் இங்கு பாதிக்கப்பட்டுள்ளன.

சீர் குலைந்த போக்கு வரவு காரணமாக சேதத்தின் விபரங்கள் இதுவரை தொகுக்கப்படவில்லை. [ராய்ட்டர்]

பாரசீக மன்னரும் ரஷிய ஆயில் ஒப்பந்தமும்

டெஹ்ரான், அக். 20

ரஷிய ஆயில் ஒப்பந்தம்பற்றி தன் அறிக்கையில் மன்னர் அபிப்பிராயத்தையும் குறித்துக் கொள்ளும் பொருட்டு இன்று பாரசீக பிரதம மந்திரி பாரசீக ஷாவைச் சந்தித்தார். கூடிய சீக்கிரம் அறிக்கை பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும்.

தூது கோஷ்டியாக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பாரசீக கைத்தொழில் பாங்கின் அதிகாரிகளை உடனே திரும்பி வரும்படி பாரசீக பொருளாதார மந்திரி உத்தரவிட்டிருக்கிறார். பொருளாதார மந்திரி காரியாலய டைரக்டர்கள் பதவிகள் யாவற்றையும் ரத்துசெய்துவிட்டார்.

சோதனையிட்ட பின் பிரிட்டிஷ் பாரிஸ்டருக்கு அனுமதி

பர்மா மந்திரி கொலைவழக்கின் முதல் எதிரி தரப்பில் ஆஜராகிறவர்

கூண்டில் நின்ற ஒரு எதிரியின் பேய்ச் சிரிப்பு

ரங்கூன், அக். 21

இன்சீன் சிறையில் விசேஷ கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டுவரும் பர்மா மந்திரிகள் கொலை வழக்கில் முதல் எதிரியான பர்மர் மாஜி பிரதம மந்திரி ஊசாவின் சார்பாக ஆஜராகும் பிரிட்டிஷ் பாரிஸ்டரான திரு பி. ஆர். வெர்ட்டனஸ சிறைக்குள்ளிருக்கும் கோர்ட்டுக்குள்செல்லும்போது அவரை சிறை அதிகாரிகள் சோதனை செய்து உள்ளேஅனுப்புகிறார்கள். இவ்விதம் தான சோதனை செய்யப்பட்டால் கோர்ட்டுக்கு ஆஜராகப்போவதில்லையென்று அவர் பத்திரிகா நிருபரிடம் தெரிவித்தார்.

இதுசம்பந்தமாக அவர்தனது ஆட்சேபனையை பர்மா சர்க்கார் நீதி இலாக்காவுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார். இன்று கோர்ட்டு நடைபெறுகையில் பத்திரிகா நிருபர்கள் பென்ஸில் சீவுவதற்கு சிறிய கத்திகளோ அல்லது ஷுவர பிளேடுகளோ கொண்டுவரக் கூடாதென்று சிறை அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அவர்கள் கோர்ட்டுக்கு வரும்போது 15 ரூபாய்க்குமேல் வைத்திருக்கலாகாதென்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

விசாரணை

இன்று கோர்ட்டில் விசாரணை நடைபெற்றபோது பத்திரிகா நிருபர் மவுங்தான் சாட்சி கூறினார். மந்திரிகள சுட்டுக் கொல்லப்படும்போது அவர் சட்டசபை நிருபர்கள் அறையில் இருந்ததாகவும் எதிரி ஜான் ஜி ஒரு காவலாளியை சுட்டுக்கொன்று தன்னைக் கொல்ல துப்பாக்கியை நீட்டியதாகவும், தான் பத்திரிகா நிருபர் என்று சொன்னதால் தான் சுடப்படாது தப்பியதாகவும் தெரிவித்தார். கூண்டில் நின்றுகொண்டிருந்த எதிரி ஜான்ஜியை நோக்கி அந்நிருபர், "இவர்தான் என்னைச் சுட வந்தவர்" என்று சுட்டிக்காட்டியபோது கூண்டிலிருந்த எதிரி ஜான்ஜி சத்தமிட்டு பேய்ச்சிரிப்பு சிரித்தார்.

[அ-பிரஸ]

கொழும்புச் செய்திகள்:

அழுகும் சாமான்கள் போக்கு வரத்து

கொழும்பு, அக். 23

புதிய டீஸல் ரயில்கள் சில கரையோரப் பாதையில் உபயோகத்துக்கு வந்துள்ளன. டீஸல் ரயில்களில் பழவகை, காய்கறி வகைகள், மீன்கள் முதலிய பொருட்கள் ஒன்றுமே ஏற்றுவதில்லை. இந்த டீஸல்கள் தூர இடங்களில் இருந்து கொழும்புக்கு வருகின்றன. அந்தந்த இடங்களில் விரைவில் பழுதடைந்துவிடக் கூடிய இப்பொருட்களை ஏற்றி வர வேறு ரயில்கள் வசதியாக இல்லை. இதனால் இப் பொருட்களை வர்த்தகர்கள் அனுப்புவதில் அதிக நஷ்டங்கள் ஏற்படுகின்றன. இப் பொருள்களை ரயில் மூலம் அனுப்புவதற்கு வசதிகள் பெறும நோக்கமாக சர்க்காருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

* * *

ரப்பர் விலையேற்றம்

கடந்த மாதத்தின் பின் ரப்பரின் விலை வரவர அதிகரித்துக் கொண்டு வருகிறது லண்டனில் ரப்பர் விற்கும விலையுடன் இங்குள்ள ரப்பரை ஒப்பிட்டுப் பார்க்கின்றாற்போல் 62 சதமாக விற்குமென்று கூறப்படுகிறது. சர்காரிடம் 1500 டன்களுக்கு மேல் ரப்பர் இருப்பில் உள்ளது அமெரிக்காவே இப்பொழுது அதிக ரப்பர் வேண்டுமென்று கேட்பதாகத் தெரிகிறது. சர்க்கார் ரப்பர் கமிஷனர் ரப்பர் விற்பனையில் மிகக் கவனமாக இருக்கின்றார்.

* * *

கரையோர ரயில் சர்வீஸ் அபிவிருத்தி

கரையோர ரயில் பாதை சர்வீஸில் அபிவிருத்தி வேலைகளைச் செய்ய ஆலோசிக்கப்பட்டுள்ளது. இப் பாதையில் அதிக டீஸல் ரயில்களை உபயோகத்துக்குக் கொண்டுவர ஆலோசித்துள்ளனர். இதனால் இப் பாதையின் ரயில் சர்வீஸ் அட்டவணை முற்றாகத் திருத்தியமைக்கப்படுகிறது. பிரிட்டன் அனுப்புவதாக இருந்த 25 டீஸல் ரயில் கார்களில் 12 டீஸல் கார் இங்கு வந்துவிட்டன. கரையோரப் பாதையில் புதிய டீஸல்களை உபயோகிப்பது டிஸம்பரில் என்று தெரிகிறது.

அடுத்த மாத ஆரம்பத்தில் மேல்பகுதி ரயில் சர்வீஸ் ஆரம்பிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இப் பகுதிக்கும் டீஸல் ரயில்களை அமுலுக்குக் கொண்டுவருவதுபற்றியும அதிகாரிகள் ஆலோசிக்கின்றனர். கண்டி பாதையில் ரயில் சர்வீஸ் ஆரம்பிக்க இன்னும் குறைந்தது இரண்டு மாதங்களாவது செல்லுமென்று கூறப்படுகிறது.

ஆலயப் பிரவேச எதிர்ப்பு

கோஷமிட்ட 12 பேர் கைது

பூனா, அக். 20

மத்திய மாகாண கவர்னராக ஸ்ரீ மங்களதாஸ் பக்வாஸா நியமிக்கப்பட்டு விட்டதால் அவருடைய ஸ்தானததில் ஸ்ரீ ஆர். ஜி. சோமன் இன்று பம்பாய் மேல் சபையில் தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இன்று பம்பாய் மேல் சபை அலுவல்கள் ஆரம்பமாவதற்கு சிறிது நேரம் முன்பு 12 பேர் டங்கிய ஒரு சனுதனிகள் கோஷ்டி கவுன்ஸில் மண்டபத்திற்குஊர்வலமாகவந்து ஆலயப் பிரவேச எதிர்ப்பு கோஷங்களை கோஷித்தனர். உடனே அவர்களைபோலிஸ கைதுசெய்தனர்.

ஐ. மா. வுக்கு பாதுகாப்புப் படை

12 லக்ஷம் பேர்களுக்கு பயிற்சியளிக்க ஏற்பாடு

லக்ஷ்மணபுரி, அக். 20

ஐக்கிய மாகாண சர்க்கார் கூடியசீக்கிரத்தில் ஓர் மாகாண பாதுகாப்புப் படையை திரட்டும். இதில் 12 லட்சம் மக்களுக்கு பயிற்சியளிக்கப்படும். இதற்கு சுமார் ரூ 50 லடசம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இப் படைக்குப் போதிப்பாளர்களின் பயிற்சி அடுத்த நவம்பர் கடைசியில் லக்னோ, கான்பூரில் ஆரம்பமாகும் என்று பிரதமரின் காரியதரிசி ஸ்ரீ ஜகன் பிரசாத் ரோவட் நிருபர்களிடம் கூறினார்.

நாவலப்பிட்டியில் முஸ்லிம் கல்லூரி

நாவலப்பிட்டி, அக். 21

நாவலப்பிட்டியில் முஸ்லிம் கல்லூரி ஒன்று ஸ்தாபிக்கும் முகமாக அங்குள்ள முஸ்லிம் லீக்கினால் ஒரு கட்டிடத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது. இவ்விழாவில் கலந்து கொண்டவர்கள் பலப் இம் முயற்சியைப் பாராட்டிப் பேசினார்கள். ஜனாப். எச். இஸ்மாயில் கட்டிடத்தின் முதற் அஸ்திவாரக்கல்லை நாட்டினார்.

மீன்பிடி இலாகா ஆலோசனை சபை

ஏற்கெனவே மீன்பிடி இலாகா ஆலோசனைச் சபைக்கு நியமிக்கப்பட்டவர்களுடன் இப்பொழுது கீழ்க்கண்டவர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்படுகிறது:- திருவாளர்கள் டபிள்யூ. சைமன் மென்டிஸ, ஹன்டி கலகப்பதி, ஓ. ஜெயசூரியா.

* * *

கார்களுக்கும் விலைக் கட்டுப்பாடு

இப்பொழுது புதிய கார்களுக்கு பெர்மிட்டுகள் வழங்கப்படும் முறை இங்கு வந்திறங்கியுள்ள கார்கள் விற்பனையானதும் முடிவடைகிறது. அதன் பின்னர் கார்களின் விலைகளில் சடுதியாக அதிகரிப்பதைத் தடுக்க எல்லாக் கார்களுக்கும் விலை கட்டுப்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது. அதிகாரிகள் இதுபற்றி ஆலோசனை செய்கின்றனர். இனிமேல் வரும் கார்களுக்கு பெர்மிட்டுகள் வழங்கப்படமாட்டாதென்றும் அக் கார்களை இறக்குமதி செய்யும் கம்பெனிகள்தான் விற்பனை செய்யுமென்றும் அறியப்படுகிறது. பெட்ரோல் அதிகமாக இருப்பதாகவும் இக் கட்டுப்பாடு விரைவில் நீக்கக்கூடுமென்றும் தெரிகிறது.

* * *

புதிய தியவடன நிலமே

தலதாமாளிகையின்புதியதியவடன நிலமேயாக தெரியப்பட்ட திரு ஸி. பி. நுகவெல நவம்பர் 3-ம் தேதிக்குப் பின்னரே தலதாமாளிகையின்பொறுப்பை ஏற்பாரென்றும் அதுவரையும் திரு. டி. பி. ரத்வத்தை திஸாவ தொடர்ந்து பதவியில் இருப்பாரென்றும் தெரிகிறது.

* * *

கார் மோதி ரிக்ஷா இழுப்பவன் மரணம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதி விரைவாக ஓட்டப்பட்டு வந்த ஒரு கார் மாடசாமி என்னும் ரிக்ஷா இழுப்பவன் மீது மோதியதால் ரிக்ஷா இழுப்பவன் பலத்த காயமடைந்தான். அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுகையில் வழியில் மரணமடைந்தான்என்று கூறப்படுகிறது. ரிக்ஷாவுடன் மோதிய கார் நிற்காது சென்று விட்டதாகத் தெரிகிறது.

கடல் அலைபோல் கமியூனிஸ்ட் துருப்புகள் வந்து குவிகின்றன

மஞ்சூரியாவில் கோர யுத்தம்

அமெரிக்க விமானி கைது

ஷாங்கை, அக். 21

மஞ்சூரியாவில் நடைபெறும் அகோரமான யுத்தத்தில் ஏராளமான கமியூனிஸ்டு துருப்புகள்எல்லா பக்கங்களிலுமிருந்து வந்து குவிந்து கொண்டே இருக்கின்றன என்று சீன சர்க்கார் தெரிவிக்கின்றனர். மும்முரமாக வந்து தாக்குவதற்கு மூன்று பக்கங்களிலுமிருந்து கடல் அலை மோதுவது போல கமியூனிஸ்டு துருப்புகள் வருகின்றன. மஞ்சூரியாவிலுள்ள சீன சர்க்காரின் தலை நகரமான சாங்கன் நகரைக் கைப்பற்றுவதற்காக அவைகள் தெவெய் நகரில் வந்து குவிகின்றன. பல இடங்களில் போர் நிகழ்கின்றன. சில இடங்களில் சர்க்கார் துருப்புகளுக்கு வெற்றி கிடைத்துள்ளன.

சீன மந்திரி ராஜினாமா

ஷாங்கை, அக். 21

சீனசர்க்கார் நிதிமந்திரி டாக்டர் யூயி ராஜினாமாசெய்துவிட்டார். அவர் கான்டன் நகருக்குத் திரும்பிப் போகிறார். குவான்சௌ மேயராவார் என்று தெரிகிறது.

அமெரிக்க விமானி கைது

ஷாங்கை, அக் 21

வெள்ளிக்கிழமை ஓர் அமெரிக்க விமானம் காணாமற்போய் விட்டது. அந்த விமானத்தின் அமெரிக்க விமானியும் ஒரு சீன விமானியும் ஹோட்பை மாகாணத்தில் கமியூனிஸ்டுகளால் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

சீன சர்க்கார் இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டங்களால் பல பிரிட்டிஷ் கம்பெனிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதைக்குறித்து இங்குவந்துள்ள பிரிட்டிஷ் தூதுக் கோஷ்டியார் சீன சர்க்காருடன் சமரசப் பேச்சு நடத்துகிறார்கள்.

(ராய்ட்டர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

செனட் சபைக்கு திறமை சாலிகள் தேவை!

யூ. என். பியை பலப்படுத்த, பொதுஜனங்கள் துரத்திய பேர்வழிகளைத் தெரிவு செய்வதா?

சோல்பரி திட்டத்தின் நோக்கத்திற்குப் பங்கம்

நேற்று முன்தினம் வெளிவந்த "சிங்கள ஜாதிய" எழுதிய ஆசிரிய தலையங்கத்தின் தமிழாக்கம்:-

பார்லிமெண்ட அங்கத்தவர்களால் செனட் சபைக்கு 15 பேர்களைத் தெரிவு செய்வதை சோல்பரி கமிஷனர்கள் அனுமதித்திருந்ததானது, கடைசியில் ஆச்சரியமான ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்பதே எமது அபிப்பிராயமாகும். இங்கிலாந்தைப் போன்று நமமிலங்கையிலும் செனட்சபை (மேல் சபை) இருக்கவேண்டுமென்று நம் தேசத்து "ஸர்" பட்டதாரிகளும் பெரிய வீட்டு பெரிய மனிதர்களும் சோல்பரிகமிஷனர்கள் முன் ஆலோசனை கூறினார்கள். இவர்களின் ஆலோசனை மீது சந்தேகப்பட்ட நாம் சின்னஞ்சிறு நாடான இலங்கையில் இரண்டு சபைகள் வேண்டியதில்லையென்று பலமாக கண்டித்திருந்தோம்.

கூர்ந்து கவனித்தால்?

பின்பு வெளிவந்த சோல்பரி அறிக்கையில், செனட்சபையிறுவுவதின் நோக்கத்தையும் அதற்குள்ள அதிகாரங்களையும் கூர்ந்து கவனித்த பொது மக்கள், மேல்சபை நிறுவும் ஆலோசனையை உதாசீனம் செய்தார்கள். மேல் சபை நிறுவுவதன் நோக்கங்களைப்பற்றி சோல்பரி அறிக்கையில் பின்வருமாறு காட்டப்பட்டிருக்கிறது.

செனட்டர்களின் யோக்கியதாம்சம்

"செனட் சபைக்கு அங்கத்தவர்களை நியமனம் செய்யும் பொழுதோ அல்லது தெரிவு செய்யும் பொழுதோ, பொது மக்களுக்கு பேதமின்றி விசேஷ தொண்டாற்றியவர்களையும் (வைத்தியம் - சட்டம் - இஞ்சினியரிங் - வர்த்தகம் - தொழில்) பலதரப்பட்ட துறைகள் சம்பந்தமாக மிகுந்த அறிவும், நீண்ட அனுபவமும் உள்ளவர்களையுமே தெரிவு செய்ய முயற்சிக்க வேண்டும். இப்படி தெரிவு செய்யப்பட்டோ நியமனம் செய்யப்பட்ட செனட்டர்கள், செனட் சபை விவாதங்களின்போது தர்க்கத்திறமையோடு சாதுரியமாக நடவடிக்கையெடுக்கவும், தேசத்தின் பொது வாழ்க்கை சம்பந்தமாக உயர்ந்த தொண்டாற்றக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்."

திறமையான செனட் சபையினால்...?

மேற்படி யாக்கியானத்தின்படி, தகுந்த திறமையான "செனட் சபை நிறுவப்பட்டால், அதனால் தேசத்திற்கு மட்டற்ற நன்மையே யன்றி, எவ்விதத்திலும் தீமையை உண்டாக்குமென்று நாம் நினைக்க மாட்டோம்". அது மாத்திரமல்ல, செனட் சபைக்கு இருக்கும் அதிகாரம் பார்லிமெண்டினால் அவசரமாக நிறைவேற்றும் சட்டங்களை தாமதப்படுத்தி வைப்பது மாத்திரம் தான் என்றபடியால், சிலர் செனட் சபை நிறுவுவதை எதிர்க்கும் முயற்சியை தளர்த்தினார்கள்.

வியர்த்தமான லட்சியம்

எனினும், தற்போது பார்லிமெண்டினால் செனட் சபைக்கு பதினைந்து பேர்களை தெரிவு செய்திருக்கும் சம்பிரதாயத்தைப்பற்றி கூர்ந்து கவனித்தால், சோல்பரி கமிஷனர்களின் உயர்ந்த நோக்கம் பூரணமாகவியர்த்தமாய்போய் விட்டதோடு, நையாண்டிக்கும் பாத்திரமாய்விட்டது. இப்படி விளையாட்டுக் காரியமாய்விட்டதைப்பற்றி ஒருவரும் ஆச்சரியப்பட மாட்டார்கள்.

தகுதியற்ற செனட்டர்கள்

செனட் சபைக்கு தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் 15 அங்கத்தவர்களில் இரண்டு மூன்று பேரைவிட மற்ற யாவரும் அச்சபைக்கு தகுதியுடையவர்கள் என்று நாம் அபிப்பிராயப்படவில்லை. விசேஷமாக யூ. என். பி. சார்பாக செனட் சபைக்கு அங்கத்தவர்களை தெரிந்தெடுத்த மாதிரி மிகவும் ஆச்சரியமான தோடு வெறுப்புக்கிடமாயும் இருக்கிறது

வாக்காளர்களால் திரஸ்கரிக்கப்பட்ட யூ.என்.பி.கள்

பொது மக்களால் திரஸ்கரிக்கப்பட்டும் தேர்தலில் படுதோல்வியடைந்தும் தமது தேர்தல் கட்டணததைக்கூட பறிகொடுத்த யூ. என். பி. காரர்கள் சிலர் செனட் சபைக்கு அங்கத்தினராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் கொள்கை ரீதியாக தேர்தலில் தோல்வியடைந்தவர்களை செனட் சபை அங்கத்தவர்களாக தெரிவு செய்யக் கூடாதென்று பொதுஜனக் கிளர்ச்சியும்கூட இருந்தது. எனினும் பொதுஜன சம்மதத்தைக் கூட தச்சமாகக்கருதி எவ்விதக் கொள்கையையும் லட்சியமும் பண்ணாத யூ. என். பி. மதப்பிழந்து தேர்தலில் அபஜெயமடைந்தவர்களை செனட்டர்களாகதெரிவுசெய்திருக்கிறார்கள் என்பது இரகசியமல்ல.

யூ. என். பி. தலைவருக்கு உண்டான திக்குமுக்கு

யூ. என். பியின் தலைவரும், அரசாங்கத்தின் பிரதம மந்திரியுமான திரு. டி. எஸ். சேனநாயக்கா, தேர்தலில் தோல்வியடைந்தவர்களை செனட்டர்களாகதெரிவுசெய்வதைஆரம்பத்திலிருந்தே எதிர்த்துவந்தார்கள். எனினும், அவருக்கு தன் கட்சி (யூ. என். பி.) யை பரிபாலிக்க முடியாத அவ்வளவு அசம்பாவிதங்கள் ஏற்பட்டிருக்கிறதென்று இதனால் அறியக்கிடக்கிறது.

செனட்டரின் தகுதிபணமே!

பார்லிமெண்ட் என். பி. அங்கத்தினர்களுக்கு செனட்டர் பதவிக்குத் தகுதியாக பணத்தையே முக்கியமாகக் கொண்டிருக்கிறார்களென்று அவர்களின் இந்த செனட்டர் தெரிவிலிருந்து நன்றாகத் தெரிகிறது. மற்றப்படி உயர்ந்த அரசியல் அறிவு, அனுபவம், சாதுரியம், காரியத்திறமை, ஒழுக்கம் என்பவை எல்லாம் அவர்களுக்கு செல்லாக்காசு என்பது பொது மக்களுக்கு ஏற்கனவே தெரிந்ததுதான். பொதுவாக நமது மந்திரிகள் பார்லிமெண்ட் அங்கத்தவர்களை ஒவ்வொருவராக ஒவ்வொரு முறையில் நிதானத்துடன் சற்று அலசிப்பார்த்தால் பொது மக்கள் ஏளனம் பண்ணி சிரிப்பார்களேயொழிப வேறு சிலாகிக்க காரணமெதுவுமில்லை என்பது உண்மையாய் இருக்கிறது.

இன முறையில் செனட்டர் தெரிவு

இந்த 15 செனட்டர்களையும் இனமுறை-தோழமை-பணச்செல்வாக்கு இவைகளை முன்னணியாகவைததே தெரிவு செய்யவில்லையென்று தைரியமாகச் சொல்லக்கூடியவர்கள், இந்த நாட்டில் இருக்கிறார்களென்று நாம் நம்பவில்லை. ஸ்ரீமதி மொலமுரேயின் தெரிவு சம்பந்தமாக உறவு முறையை அனுசரிக்கவில்லையென்றால், செனட்டில் ஒரு பெண் அங்கத்தவர் இருக்க வேண்டுமென்பதையே முக்கிய காரணமாகச் சொல்ல முடியும் எனினும், யூ. என். பி. பெண் அங்கத்தவர் இல்லாக்குறையை இப்பொழுதுதான் கண்டுபிடித்தார்களா வென்று நாம் கேட்கிறோம்?

யூ. என் பி. குருடர்கள்

பார்லிமெண்டுத் தேர்தலுக்காக போட்டியிட நியமிக்கப்பட்ட ஏராளமான யூ. என். பி அபேட்சகர்களில் ஒரு பெண் அபேட்சகராவது இல்லை என்று எல்லோருக்கும் தெரியும். இந்தச் சமயத்தில் ஸ்ரீமதி மொலமுரே யூ. என். பியினர் கண்களுக்குத் தென்படாததன் காரணமென்ன?

இரு சகோதரர் மீது குற்றச்சாட்டு

கொட்டேகொடா துப்பாக்கிப்பிரயோக வழக்கு

கொழும்பு, அக். 22

சுகுண பஸ் போக்கு வரத்து கம்பெனி டைரக்டர்கள் இருவர் மீது ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு கொழும்பு பிரதம நீதிபதிமுன் கொழும்பு அசைஸ கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மாத்தறை ஜில்லாவைச் சேர்ந்த கொட்டேகொடை பகுதியில் 1946-ம் வருடம் மே மாதம் பி. எச் உபாரிஸசில்வா என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றதாக இரு சகோதரர்கள் எச். ஆர். ஜெயசுந்தரா, எச். ஆர். அமரதாஸ ஆகிய இருவர் மீதும் குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

பஸ் கம்பெனியில டைரக்டர்கள் தெரிவு செய்யப்படுவதில் இருந்த போட்டியால்தான் இச் சம்பவம் ஏற்பட்டதாகவும் மற்றும் விபரங்களும் கோர்ட்டில தெரிவிக்கப்பட்டது விசாரணை மேற்கொண்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஏமாற்றிப் பணம் பெற்றதாக வழக்கு

கொழும்பு, அக். 22

ஏலியகொடையைச் சேர்ந்த பன்னாவெல வாசியான ஏ. சிரில் பெரேரா என்பவர் கிராண்ட்பாஸ் ஸ்ரீகிருஷ்ண கொப்பரு அன் ரப்பர் மில் சொந்தக்காரர் திரு பிச்சைமுத்துவையும், அபூபக்கர் அன் கம்பெனியைச் சேர்ந்த திரு. எஸ். பி. கனியையும், மெஸர்ஸ் ஜி எச். ஏரம்ஜியைச் சேர்ந்த முத்துசாமி சுப்பையாவையும் முறையே ரூ 25, ரூ. 100, ரூ 50 பெற்றுக்கொண்டு கொப்பரு சப்ளை செய்வதாக ஏமாறறியதாக குற்றம் சாட்டிக் கொண்டு வரப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு பண்டித குணவர்த்தனா முன் தாக்கல் செய்யப்பட்டது. எதிரி தாம் குற்றவாளியல்ல வென்று தெரிவித்ததன் பேரில் நீதிபதி வழக்கை நவம்பர் 3-ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

வழக்காளி கோர்ட்டுக்கு வரவில்லை

பாராளுமன்ற அங்கத்தினர் விடுதலை

அனுராதபுரம், அக். 21

காலவிவாபாராளுமன்ற அங்கத்தவர் திரு. எஸ். எச் மகாதியுல் விவா என்பவரும், திருவாளர்கள் எச். செனிவிரத்ன, பி. பி. மானம்பெரி ஆகிய இருவரும், தமது மகனைத் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திவிட்டு வீட்டில் இருந்த 45 மூடை அரிசியை கடத்தியதாக எம். சியது என்பவரால் குற்றம் சாட்டி அனுராதபுரம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மாஜிஸ்டிரேட்முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்காளி கோர்ட்டுக்கு வராததினால் நீதிபதி எதிர்களை விடுதலை செய்தார்.

குட்டிச் சுவர்தான் ஞாபகமிருக்கட்டும்!

இனமறை, தோழமை, பணச்செல்வாக்கு இவைகளுக்காக இலங்கை அரசியல் அதிகாரத்தை இப்படியாக தகுதியற்றவர்களுக்கும், சாமர்த்தியமற்றவர்களின் கைக்கே சதாவும் போய்க்கொண்டிருந்தால் எதிர்காலததில் இலங்கை மக்களுக்கு மிகவும் அபத்தமான குற்றச்சாட்டே யென்பதை இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்; ஞாபகமிருக்கட்டும்!

மக்களின் கடமை

பார்லிமெண்டுக்கும் மந்திரி சபைக்கும் ஓரளவு வாழ்த்துக் கூறக் கூடியதாயினும், செனட்டர்களைத் தெரிவு செய்யும் முறையை கூடிய சீக்கிரம் மாற்ற வேண்டியதோ அல்லது பூரணமாக செனட் சபையை கலைத்து சீர்திருத்துவதோ தேசத்தின் மீது ஆர்வமுள்ள பொது மக்களின் கடமையென்று எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

பால்கனுக்குக் கமிஷன்

ரஷியா செக்கோஸ்லவகியா எதிர்ப்பு

நியூயார்க், அக். 21

ஐக்கிய நாடுகள் சபை பால்கன் விசாரணைக் கமிஷன் நிறுவப்படுவதைத் தடைசெய்யும் முயற்சியில் ரஷியப் பிரதிநிதி விஷின்ஸகி அரசியல் கமிட்டித் தீர்ப்புகளை உதறித் தள்ளிவிடும்படி இங்கு கேட்டுக் கொண்டார். இரேக்க கொரில்லாக்களுக்கு யூகோஸ்லவகியா, பல்கேரியா, அல்பேனியா முதலிய நாடுகள் உதவி செய்வதாகக் கூறும் புகாருக்குப் போதிய காரணம் கிடையாது என்றும் அவரால் சொல்லப்பட்டது.

பால்கனில் அமைதியை நிலைநாட்ட அங்கு முகாம் போட்டிருக்கும் பிரிட்டிஷ் அமெரிக்க ராணுவத்தை வாபஸ் வாங்குவதோடு, கிரீஸிற்கு அமெரிக்க உதவி செய்வதைக் கண்காணிக்க ஒரு விசேஷ கமிஷன் நிறுவப்பட வேண்டுமென்றும் விஷின்ஸ்கி கூறினார். மேற்படி கூற்று போலந்தால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஒன்றை ஆதரித்துக் கூறப்பட்டது.

செக்கோஸ்லவகியா ரஷியாவை ஆதரித்து "பால்கனுக்கு ஒற்றைக்கண் கமிஷன்" அனுப்பப்படுவதை ஆட்சேபித்தார். (ராய்ட்டர்)

ஜப்பானில் பாசிசம்

சீன சர்க்கார் பத்திரிகை எச்சரிக்கை

ஷாங்கை, அக். 20

சீன சர்க்கார் பத்திரிகை 'சினுவன் பாவோ' ஜப்பானில் பாசிசம் ஏற்பட்டுவருவதை எச்சரித்து பின் வருமாறு எழுதுகிறது:- ஜப்பான் ஆசியாவில் பழைய நிலைமையை அடைய முயல்கிறது. ஜப்பான் சமாதான மகாநாட்டில் கலந்து கொள்வதையும் ஐக்கிய தேசஸ்தாபனத்தில் சேருவதையும் சைனா ஆட்சேபிக்கும். ஜப்பான் பாசிஸ்டுகளான பண முதலாளிகளும் ராணுவ வெறியர்களும் மீண்டும் தலைதூக்கி வருவதால் சீனர்கள் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும். (ராய்ட்டர்)

"நேச உறவுக்குத் தடையாயிருப்பது பிரிவினைதான்"

ஸ்ரீ டிவாலரா பதில்

டப்ளின், அக். 20

"ஒவ்வொரு மாதமும் அயரின் பிரச்னை எழும்பியிருக்கிறது. பிரிட்டனின் நேச உறவுக்கு இப்பொழுது தடையாயிருப்பது பிரிவினைதான் என்பதை நான் பல முறை தெளிவுபடுத்தியுள்ளேன்" என்று தொழில் பார்லிமெண்டு வாதி நார்டனுக்குப் பதிலளிக்கையில் ஸ்ரீ டிவாலரா கூறினார்.

இப்பொழுது பிரிட்டன் பர்மாவுக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறது. எகிப்திலும் தனது விசேஷ பிரதேச உரிமைகளை இழக்க இதற்குக் கட்டாயப் படலாம். இவ்விதம் இருக்கும்போது அயர்லாந்து நாடுகளிலிருந்து பிரிட்டன் வெளியேற டிவாலரா பெயரளவில் ஓர் கோரிக்கையை விடுவாரா என்று ஸ்ரீ நார்டன் கேட்டார்.

இக்கோரிக்கை அயர் பிரச்னையை தீர்க்க உதவுமா அல்லது மேலும் கடினமாக செய்து விடுமா என்பது கேள்வி என்று ஸ்ரீ டிவாலரா பதிலளித்தார்.

அமெரிக்க நிருபர் சங்கம்

சோவியத் சர்க்கார் கலைத்துவிட்டனர்

மாஸ்கோ, அக். 21

ஆங்கிலோ-அமெரிக்க பத்திரிகை நிருபர்கள் கொண்ட சங்கம் சோவியத் அதிகாரிகளால் கலைக்கப்பட்டுவிட்டதாக அச் சங்க கூட்டத்தில் நேற்று தெரிவிக்கப்பட்டது. கடந்த மே மாதத்திலேயே இச் சங்கம் கலைக்கப்பட்டுவிட்டதென்று கருதப்பட்டதாக சோவியத் அடல் நாட்டிலாகாவைச்சேர்ந்த எம். வாஸிலென்கோ என்னும் அதிகாரி தெரிவித்துள்ளதாக இச் சங்கத்தின் தற்காலிக தலைவர் தெரிவித்துள்ளார். (ராய்ட்டர்)

சிரியா பாலஸ்தீன எல்லை எது?

ஜெருசலேம், அக். 21

பாலஸ்தீன் சிரியாவின் சரியான எல்லையைக் குறிக்கும்படி பிரிட்டிஷ் ராணுவத் தலைமைக் காரியாலயம் தனது உத்தியோகஸ்தருக்கு அறிவித்துள்ளது, இதற்குக் காரணம் பாலஸ்தீனில் ஒரு இடத்தில காணப்பட்ட 20 சிரியர்கள் ஆகும். இவர்கள் ஆயுதமோட்டார் ஒன்றில் காணப்பட்டனர். இவர்கள் சட்டத்திற்கு முரணாக நடந்தனரா என்பதே இவ் எல்லைப் பிரச்னைக்குக் காரணம் குறித்த சிரியர்கள் சபாதிற்கு வடகிழக்கில் காணப்பட்டார்கள். அவர்கள் தாம் சிரியாவில் இருப்பதாக வாதிக்க பிரிட்டிஷ் காவலாளர் மேற்படி சிரியர்கள் இருப்பது பாலஸ்தீன் என்று வற்புறுத்தினர். (ராய்ட்டர்)

கொரியா கூட்டுக் கமிஷன்

ஸியோல், அக். 20

கொரியாவிலுள்ள ரஷியா-அமெரிக்க கூட்டுக் கமிஷன் கூட்டம் இன்று நடைபெற்றது. துருப்புகளை வெளியேற்றும்படி ரஷியா கோரியதை அமெரிக்கா ஏற்றுக்கொள்ளாமல் கமிஷனைக் கலைக்கும்படி கூறிற்று. கூட்டுக் கமிஷனின் சோவியத் பிரதிநிதி கோஷ்டியை வடகொரியாவுக்குத் திரும்பி விடும்படி சோவியத் சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

ஹோலிவுட்டில் கமியூனிஸடுகள்

சர்க்கார் கமிட்டிகள் விசாரணை

வாஷிங்டன், அக். 21

ஹோலிவுட்டில் கமியூனிஸ்டுகள் நடவடிக்கைகள் பற்றியும் அமெரிக்கருக்கு எதிராக நடந்தவை பற்றியும் விசாரணை நடத்துதற்கு அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. இக் கமிட்டி விசாரணையை சட்டவிரோதமானதெனநடிகநடிகைகள் கண்டித்தனர். சில நடிகைகள் அனுப்பிய தந்திச் செய்தியிலும் இதனை கண்டித்துள்ளனர்.

கமிட்டி தலைவர் திரு வி. தோமஸ் விசாரணையை ஆரம்பிக்கும்போது கமியூனிஸ்டுகள் இங்கு எவ்வளவு ஆதிக்கம் பெற்றுள்ளனர் என்பதையே தாம் அறிய விரும்புவதாக கூறினார்.

முதலில் காட்சியளித்த திரு ஜாக வார்னர், தமது ஸ்டுடியோவில் கமியூனிஸடு ஆதிக்கம் சிறிது இருக்கிறதென்றும் ஆனால் அது சம்பந்தமானவற்றை தாம் பின்னர் துண்டித்துவிட்டதாகவும் தெரிவித்தார். (ராய்ட்டர்)

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ரானி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முந்நூங்கள் விலை ரூ. 3-50
இந்தியா ரூ. 3-8-0.
V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,
85, பழைய சோனகத்தெரு,
கொழும்பு.

எல். கே. ஷேக் முகம்மது,
பிரதர்ஸ் (மரைக்கார் கடை)
பூக்குளம் பார்க்கிற்கு எதிரே
திருச்சினாப்பள்ளி.

கல்வியே கருந்தனம்

பிடிச் சக்கரவர்த்தி.

த.பி. சொக்கலால் ராம்சேட் பீடி

2 பீடிரிங்லேபில்

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!

மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது
இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்

மேனகா மார்க் லொசிஞ்சர்களே!

மேனகா மார்க் லசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும், இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது. அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.

மேனகா மார்க் லொசிஞ்சர்

எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-

ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737

கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸதர்களாக நியமித்திருக்கிறோம்.

V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுததர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஷியாவுடன்இருதென்னமெரிக்க நாடுகளின் உறவு ரத்து

பிரேஸிலில் 6 லட்சம் கமியூனிஸ்டு வோட்டர்கள்

'ஹோலிவுட், மாஸகோ தலைவர்களின் கமியூனிஸட் பிரசாரக் கருவி'

ரஷியா மீது ஆஸ்திரேலிய அந்நியநாட்டு மந்திரி குற்றச்சாட்டு

ரியோடி ஜனேரோ, அக். 21

தென்னமெரிக்காவிலுள்ள பிரேசில் சர்க்கார் சோவியத் ரஷியாவுடனிருந்த ஸ்தானிக உறவை ரத்துச் செய்து விட்டது.

தென்னமெரிக்காவிலுள்ள சில்லி சர்க்கார் சோவியத் ரஷியாவுடனும் செக்கோஸ்லவகியாவுடனுமுள்ள ஸ்தானிக உறவை ரத்து செய்கிறது.

இது விஷயத்தை பிரேசில் சர்க்கார் அமெரிக்காவுக்கு முன்னராகவே தெரிவித்துள்ளது. மாஸ்கோவில் பிரேசில் விவகாரங்களை அமெரிக்க ஸ்தானிகர் இனி கவனித்துக்கொள்வார் என்று அமெரிக்கசர்க்கார் அறிவித்தனர்.

பிரேசிலில் பொதுத் தேர்தலில் அநேக கமியூனிஸடுகள் வெற்றிபெற்றார்கள். அங்கு 6 லட்சம் கமியூனிஸட் வோட்டர்களிலிருக்கிறார்கள். கமியூனிஸடு கட்சியை பிரேசில் சர்க்கார் சட்ட விரோதமாக்கி விட்டார்கள். பிரேசிலிலிருந்த சோவியத்ஸ்தானிகர் மாஸகோ போய்த் திரும்புவதாகச் சொல்லி பயணமாய் விட்டார்.

ஐக்கிய தேச அசெம்பிளிக்கு பிரேசில் பிரதிநிதியும் அந்நிய நாட்டு மந்திரியுமான ஸீஸர் அரன்ஹா தலைவராக இருக்கிறார். பிரேசில் ரஷியாவை விபோதித்துக் கொண்டதால் பாதுகாப்பு கவுன்ஸிலில் உக்ரைனுக்குப் பதிலாக இந்தியாவைக் கொண்டு இனி தென்னமெரிக்க நாடுகள் ஆதரவளிக்கும்என்று அபிப்பிராயம் நிலவி வருகிறது. ஆனால் அரன்ஹா ஸ்தானிக உறவு ரத்துக்கும் பாதுகாப்பு கவுன்ஸிலில் தேர்தலுக்கும்சம்பந்தமில்லையென்று தெரிவித்தார்.

தெற்கு சில்லியில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் இருந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். சர்க்கார் அவர்களை ராணுவத்தைக் கொண்டு கலைப்பதாக இறுதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இன்று சுரங்கத் தொழிலாளர்கள் 50 சோல்ஜர்களடங்கிய ஒரு படையின் மீது வெடிகுண்டை வீசினார்கள்.

ஹோலிவுட் கமியூனிஸ்டுகள்

வாஷிங்டன், அக். 21

இன்று அமெரிக்க பார்லிமெண்டு கமிட்டி முன் பிரபல சினிமா நடிகரான அடோல்பே மெஞ்சு பின் வருமாறு தெரிவித்தார்:-

அமெரிக்காவில் ஹோலிவுட்தான் கமியூனிஸடு பிரசாரத்திற்கு முக்கிய இடமாக இருக்கிறது. அமெரிகக சர்க்காரைக் கவிழ்க்கவும் சினிமாப் படம் மூலம் கமியூனிசத்தை உலகில் பரப்பவும் மாஸ்கோவிலுள்ள கமியூனிஸ்டு தலைவர்கள் ஹோலிவுட்டை கருவியாக உபயோகித்து வருகிறார்கள்.

ஐக்கியதேச அசெம்பிளியில்

இன்று ஐக்கிய தேச அசெம்பிளியில் ஆஸ்திரேலிய அந்நிய நாட்டு மந்திரி பேசிய போது, கிரீஸ் விவகாரங்களில் தலையிட அல்பானியா, யூகோ, பல்கேரியா ஆகிய நாடுகளுக்கு ரஷியா ஆதரவளிப்பதாகக் குற்றஞ் சாட்டினார். இந்த மூன்று நாடுகளும் கிரீக்குள் ஐந்தாம் படை நிறுவியிருப்பதாக கிரேக்க அந்நிய நாட்டு மந்திரி தெரிவித்தார்.

அராபிய லீக் காரியதரிசி அறிக்கை

கேம்பிரிட்ஜ், அக். 21

பாலஸ்தீனப் பிரிவினையை ஆதரிப்பதால் ரஷியா தனக்கு ஏற்கண்ட 4 அநுகூலங்களைப் பெற முயற்சிக்கிறதென லண்டனிலுள்ள அராபிய லீக் காரியதரிசி அட்டியாம் தெரிவிக்கிறார்:-

ஐக்கிய தேச ஸ்தாபனம் பாலஸ்தீனத்திற்கு சர்வதேசப் படை அனுப்பினால் அதில் ரஷியாவும் 30 ஆயிரம் துருப்புகள் வரை அனுப்ப முடியும். இதன் மூலம் ரஷியா மத்திய கிழக்கின் கிழக்குக் கோடியான மத்திய தரைக் கடல் எல்லைவரை தன் படையைப் பரப்பிக் கொள்ளலாம். மேற்கு வல்லரசுகள் அராபிய நாடுகளுடன் மாட்டிக் கொள்வதால், மத்திய கிழக்கில் பிரிட்டன், அமெரிக்க உதவிகள் நாசமாக வேண்டுமென்று ரஷியா விரும்புகிறது.

மவுண்ட் பேட்டனின் சகோதரிகள்

இளவரசி விவாகத்துக்குப் போகமாட்டார்கள்

லண்டன், அக். 21

ஜேர்மன் இளவரசர்களை மணந்து ஜேர்மனியில் ஜீவித்துவரும் பிலிப் மவுண்ட் பேட்டனின் மூன்று சகோதரிகளும், அவருக்கும் இளவரசி எலிஸபெத்திற்கும் நடக்கும் திருமணத்தின்போது ஆஜராய் இருக்கமாட்டார்கள்.

(ராய்ட்டர்)

பாலஸ்தீனத்தில் யூதர் நாடு ஏற்படுத்தினால் அது அமெரிக்காவின் உதவியைப்பெறவேண்டியதாக இருக்குமென்றும் அந்த சமயத்தில் அராபிய நாடுகளைத் தன் வலையில் பிடித்துப் போட்டுக் கொள்ளலாமென்றும் ரஷியா கருதுகிறது.

பால்கன் கமிஷன்

ரஷியாவின் பலமான எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் ஐக்கிய தேச அசெம்பிளி நேற்று புதிய பால்கன் விசாரணைக் கமிஷனை நியமிக்கத் தீர்மானத்தது.

பாரசீகம்

(டெஹ்ரான், அக். 21

பாரசீக பிரதம மந்திரியின் ஜனநாயகக் கட்சிப் பத்திரிகை ரஷியாவுக்கும் பாரசீகத்துக்குமிடையே ஒரு சமரச ஏற்பாடு செய்ய வேண்டுமென்று எழுதுகிறது. பிரிட்டனுடனும் ரஷியாவுடனும் பாரசீகம்நேசபான்மையுடனிருக்க வேண்டுமென்று கூறுகிறது. பார்லிமெண்டுக் கூட்டம் இன்னும் தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது.

யுத்தப் பிரசாரம் கண்டனம்

நியூயார்க், அக். 21

மூன்றாவது உலக யுத்தத்தினை கொண்டுவந்து விடக் கூடிய பிரசாரப் பேச்சுகளை ஐக்கிய தேச ஸ்தாபன அங்கத்தினர்கள் பேசலாகாது என்று ஆஸ்திரேலியா ஐக்கிய தேச அசெம்பிளியில் ஒரு தீர்மானத்தைச் சமர்ப்பித்திருக்கிறது.

(ராய்ட்டர்)

கவர்னருக்கு தேக அசௌக்யம்

கொழும்பு, அக். 23

கவர்னருடைய தேக அசௌக்யம் காரணமாக எல்லா சமூக பொது விஷயங்களிலும் கவர்னர் சுமார் ஒரு வாரம் அல்லது 10 நாட்களுக்கு கலந்து கொள்ளமாட்டார் எனக் கவர்னர் காரியாலய அறிக்கையொன்று கூறுகின்றது. வைத்தியர் ஆலோசனையின்படியே கவர்னர் ஓய்வெடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

தேசியக் கொடி

ஐயா,

எமது இலங்கைத் தாய்க்கு ஏற்றதொரு கொடி ஆவசியகம் என்பது இலங்கை மகா ஜனங்களுக்குத் தெரிந்ததே நம்மிலங்கையில் சிங்களவர்என்றும் யாழ்ப்பாணத் தமிழர் என்றும் இலங்கை இந்கியத தமிழர் என்றும் முஸலீம்களென்றும் இன்னும் பறங்கியர் ஆங்கிலேயர் என்றும் பல சாதியார்கள் வதிகின்றனர். இவர்களெல்லோரும் இலங்கைமாதாவின் புததரர்களே. பிறநாட்டாராயிருப்பினும் சகோதரராவர். மனிதர் என்றால் ஓரினம்என்பதை எல்லோரும் மனதில் வைக்க வேண்டும். இப்படியிருக்கும் இலங்கையர் எல்லோருஞ் சேர்ந்தே இலங்கை மாதாவின் கொடி 'இப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்' எனத் தீர்மானிக்க வேண்டும். இந்தியாவிலனுஷ்டித்ததுபோல் பட்சபாதமற்ற இருவரை அல்லது மூவரை நியமித்தல் நல்லதே. சாதிமத அபிமானமுள்ளோர் இதில் தலையிடுதல் நல்லதல்ல. நடுநின்று ஆராய்ந்து செய்ய வேண்டியது.

இந்திய யூனியன் கொடியில் சாதிமதச் சின்னங்கள் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை சாதிமதச் சின்னங்களைப் பொறிக்க உயர்ந்தோர்களும் அரசியல்ஞானிகளும்ஏற்கமாட்டார்கள். எல்லோருக்கும் பொதுவான அம்சம் காணப்பட வேண்டும் அதனாலேதான் இந்திய யூனியன் கொடியை எல்லாச் சாதியார்களும் சமயத்தார்களும், உயர ஏற்றி அன்புடன் வணங்குகின்றனர். கட்சிகளுள்ளும் எல்லாகட்சிகளும் மனப்பூர்வமாக ஏற்றிநக்கின்றன. ஆதலினாலே ஒரு தேசத்தின் கொடியில் [இந்தியா இலங்கை போன்ற நாடுகளில்] ஒரு வகுப்பையோ, அல்லது ஒரு சமயத்தையோ, அல்லது ஒரு அரசியற்கட்சியையோ குறிக்குஞ் சின்னங்கள் இருத்தல் கூடாது. அதனால் சாதி, மத கட்சிவாதங்களே வந்து சேரும்; அல்லாது ஒற்றுமையிருக்க மாட்டாது.

ஒரு கட்சி, தான் பலமாயிருக்கின்றபோது ஒரு தேசததில் தனது லட்சியதத்துக்குரியகொடியை ஏற்றுமாகில், மறுகட்சிஅரசாடசிக்கு வரும்போது முன் ஏற்றிய தனது எதிர்க்கட்சிக் கொடியை மாற்ற நேரிடுமல்லவா? ஆதலினால் அது பொருத்தமற்றதே. ஆகவே தாம்தம் பழம் பெருமை பேசுவதையும் தமது சக்தியையும் பத்திரிகைகளில் பேசுவதை ஆராய்ந்து பேச வேண்டுகின்றேன்.

ஒரு பகுதியார் ஒரு கொடியைப் பின்பற்றினால் அதனை அரசியலில் கொண்டுவந்து, அதுவும் எல்லாப் பகுதியாரும் சம்மதம் கொடுக்காவிட்டால் உயரப் பறக்க விடுதல் புத்தியல்லவே. இலங்கை மாதா எல்லாரையுந்தானே ஈன்றெடுத்தாள். அதில் வித்தியாசமேன்? எமது தாய்நாடாகிய இந்தியாவிலிருந்து நாம் சுமார் 25 மைல் கடற்பரப்பினால் பிரிக்கப்பட்டிருப்பதால் அங்கே வீசும் நல்ல மணம்எமக்குக் காட்டவில்லையோ. எல்லோரும் ஓர்குலமாக நாம் வாழ்தலல்லவோ சிறப்பு. உலகத்திலேயுள்ள எல்லா மனிதர்களும் காந்தியடிகளை எதிர்பார்த்து அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி நிற்கும்போது, அண்டையிலிருக்கும்நாம் சாதிக்கும், சமயத்துக்கும் மல்லுப் பிடிப்பதும் கங்கணம் கட்டுவதும், கூட்டங்கூடிக் கண்டனம்செய்வதும் இப்போது சர்வசாதாரணமாகிவிட்டது. உண்மையை எடுத்துரைக்குப் முறைமையினால் சில காரியங்கள் ஆக்கமும் சில தாக்கமும் பெற்றன. எல்லோரும் பரந்த நோக்கமுடையவர்களாகவும் நலனவே நினைப்பவர்களாகவும் அவற்றையே செய்பவர்களாகவும் விளங்கற்பாலர்.

இலங்கைக்கொடி விஷயத்தில் துவேஷ புத்தியில்லாத நடுநின்று ஆராயும் குழுவினருடன் தற்போது கொழும்பில் இந்தியப் பிரதிநிதியாயிருக்கும் திரு. வி. வி. கிரி அவர்களையும் யோசனை கேட்கலாம். அவர்காந்திபக்தர். பட்சபாத மில்லாதவர். உள்ளபடி கூறுவார். எல்லோரும் ஓர் குலம், அன்பு, சத்தியம் அல்லது அஹிம்சைஇவற்றிற்கு விரும்பிய ஒவ்வோர் நிறத்தை ஆக்கி அல்லது ஏதேனும் இரு நிறங்களைத் தந்து அல்லது ஏதேனும் ஒரு நிறத்தைக் கொடுத்து ஆக்கலாமல்லவா. ஆதலால் நன்று ஆராய்ந்து செய்தலே தகுதியாகும் அரசியல் தலைவர்களென்றிருப்போர் தாம் வேறு, மற்றையோர் வேறு என்று எண்ணாமல் குறித்த தேசம் முழுவதற்கும் தலைவராக வேண்டும். நடுநின்று எல்லோருக்கும் சமமாய் விஷயத்தை ஆய்ந்து செய்வன செய்தல் வேண்டும். எல்லா அரசியல் தலைவர்களும் தேசம் முழுவதற்கும் உழைப்பவராய், துவேஷமின்றிநடப்பவராயிருக்கச் சர்வேசுவரனைப் பிரார்த்திப்போமாக. இலங்கைமாதாவின் கொடிவிஷயமும் துவேஷமின்றி முடிய அவனை நன்கு பிரார்த்திப்போமாக.

இணுவில், இங்ஙனம்,
சுனகைம். இ.க. சிற்றம்பலம்.
16-10-47.

சுயேச்சை அங்கத்தினர்

ஐயா,

பழைய அரசாங்க சபையிலே திரு. நல்லையா அவர்கள் காரசாரமாகச் சில கேள்விகள் கேட்டபொழுது "ஓ! இது மட்டக்களப்பிலிருந்து வந்த புதிய விளக்குமாறோ!" என்று சேனநாயக்கா பரிகாசம்பண்ணியிருந்தார். இப்படி எத்தனையோ சூடுகள் வாங்கின நல்லையா பின்புயூ. என். பியைத் தூஷித்து சுயேச்சையாளராய் நின்று தேர்தலில் வெற்றிபெற்றார். ஆனால் ஆசை வெட்கமறியாதென்றபடிபாவம்! தான் பெற்ற சூடுகளையும் மறந்து அகப்பட்ட பதவியைப் பெற்றுக்கொண்டார். சபை கலைந்தால் இன்னொருதரம் ஆயிரக்கணக்கிலே செலவழித்துத் தேர்தலில் வெற்றியடைவது இலகுவான காரியமல்ல; குறைந்தது மாதம் 700 ரூபாய் வருகிறது. ஆனபடியால் மற்றச் சுயேச்சையாளர் சிலரும் பிரதமர் (சபையைக் கலைப்பேன் என்கிற) வெருட்டுக்குப் பயந்து யூ என் பியிலே சேருகிறார்கள். பாவம்! ஒருவரையும் குறை கூற வேண்டாம்.

கொழும்பு, இங்ஙனம்,
18-10-47. வருஜன்.

துறைமுகத்தில் சுகாதார நடவடிக்கை

கொழும்பு, அக் 22

எகிப்தில் காலரா நோய் இருப்பதை முன்னிட்டு எகிப்திலிருந்து வரும் கப்பல்களில் சுகாதார நடவடிக்கைகள் தகுந்தபடி எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த காலரா ஆரம்பமாகமுன்னரே இங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததென்றும் எகிப்திலிருந்து வரும் அரிசி முதலியனவற்றை தொழிலாளர் இறக்குமுன் சுகாதார நடவடிக்கைகளுக்குட்படுத்தப் படுவதாகவும் துறைமுக சுகாதார பகுதி டாக்டர் வி. நடராஜா தெரிவிக்கிறார்.

மைத்துனியை விவாகம் செய்த முஸ்லிம்

எதிரி ரூ. 600 பிணையில் விடப்பட்டார்

கொழும்பு, அக். 23

தமது முதல் மனைவி ஆசியா உம்மா பீவி உயிரோடு இருக்கையில் மைத்துனி அகமது மீரா அஸன் உம்மாபீவியை செப்டம்பர் 15-ம் தேதி விவாகம்செய்ததாகவும் முஸ்லிம் சட்டப்படி இவ்விவாகம் அனுமதிக்கப்படமாட்டாதென்றும் கிராண்ட் பாஸ் போலிஸ் இரகசிய இலாகா சார்ஜண்ட் திரு. வி.டி. விஜயதிலகா என்பவர் புதிய சோனகதெருவைச்சேர்ந்த ஐ. முகம்மது ஹனிபா என்பவர்மீதுகுற்றமசாட்டி ஒரு வழக்கைகொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. பண்டித குணவர்த்தன முன் தாக்கல் செய்தார். நீதிபதி எதிரியை ரூ 600 பிணையில் போகுமாறு விடுத்து வழக்கு விசாரணையை 29-ம் தேதிக்கு ஒத்திவைததார். இத்தகைய வழக்கு கோர்ட்டில் எடுக்கப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

கிரவுன் தியேட்டர்

ஸ்கின்னர்ஸ் ரோடு
மருதானை

இன்று ஆரம்பம்! புத்தம் புதிய படம்!!

தினசரி மாலை 6-15 இரவு 9-30
சனியும்-ஞாயிறும் மெட்னி 3 மணிக்கு
சுவர்ணலதா-நஸீர் திறப்பட நடிக்கும்

வாமிக்-அஷ்ரா

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்
சனி ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும்
பால்கனிக்கும் 1-ம் வகுப்புக்கும் அரைச் சார்ஜ்
முன் இடம் தேடுங்கள்!

மனைவியின் தவறான நடத்தை

விவாக ரத்துச்செய்து கொள்ள நீதிபதி தீர்ப்பளித்தார்

கொழும்பு, அக். 23

கொழும்பிலுள்ள ஒருஜில்லா கணக்குப் பரிசோதகரான திரு அல்பர்ட் அபயசுந்தரா என்பவர் தமது மனைவி தவறான நடத்தை கொண்டிருப்பதாக கூறி விவாக ரத்துக் கோரி கொழும்பு ஜில்லாக் கோர்ட்டில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். ஜில்லா நீதிபதி நேற்று முன் தினம் இவ் வழக்கை விசாரணை செய்து விவாக ரத்துக் கோரிக்கையை அனுமதித்து தீர்ப்பளித்தார்.

விசாரணையின்போது, திரு. அல்பர்ட் அபயசுந்தரா, ஸ்ரீமதி ஆர்லின் அனுலா மெனடிஸ அபயசுந்தராவை 1927-ம் ஆடி மாதம் 27-ம்தேதி விவாகம் செய்ததாகவும் அவர்களுக்கு 16 வயதில் ஒரு பெண்குழந்தை இருப்பதாகவும் 1935-ம் ஆண்டு சட்டப்படி தாம் தமது மனைவியிடமிருந்து விலகிக் கொண்டதுடன் மகளின் பாதுகாப்பை தாம் எடுத்துக் கொண்டதாகவும், பின்னர் தமது மனைவி வேறு ஆட்களுடன் தவறாக நடத்தை கொண்டிருப்பதால் தமக்கு விவாகரத்து செய்து கொள்ள அனுமதிக்க வேண்டுமென்றும் வழக்காளி தெரிவித்திருந்தார். இரு சாட்சிகளை விசாரணை செய்த பின் நீதிபதி விவாக ரத்து செய்து கொள்ள அனுமதித்தார்.

ஏமாற்று வழக்கில் ரயில்வே ஸ்டார் அதிகாரி விடுதலை

கொழும்பு, அக். 23

ரயில்வே உதவி டிஸ்பாச்குமாஸ்தா திரு டி. பி. பொதெரகமா என்பவரை ஏமாற்றி ரூ. 337-50 மதிப்புள்ள 30 வெறும் தகரங்களை (ரயில்வேயுடையது) வாங்கியதாக மருதானையைச் சேர்ந்த ஏ. அஹமத் என்பவர் மீதும் இதற்கு உடந்தையாக இருந்ததாக ரயில்வே ஸ்டோர்களின் பிரதம ஸ்டோர் கீப்பரான திரு ஜி. டி. ஈ. பெர்னாண்டோ மீதும், மீண்டும் ஜூன் 11-ம் தேதி இனந்தெரியாத ஒருவருக்கு ரூ 618-75 மதிப்புள்ள 55 வெறுந் தகரங்களை கொடுக்கும்படி திரு. பொதெரகமா என்பவரை வற்புறுத்தியதாகவும் அதற்கு உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. பிரெட் ஈ. அல்லெஸ முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

விசாரணை முடிவில் முதல் எதிரி ஏ. அஹமத் குற்றவாளியாகக் காணப் பட்டதால் தண்டனை அளிக்கப்படுவது வெளிக்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டது. திரு. பெர்னாண்டோ மீது குற்றமில்லையெனக் கண்ட நீதிபதி அவரை விடுதலை செய்தார்.

வார முடிவில் நான்கு கொலைகள்

கொழும்பு, அக். 22

கடந்த வார முடிவில் நான்கு கொலைகள் நடந்துள்ளதாக போலிஸ் தலைமைக் காரியாலயத்திலிருந்து அறிவிப்படுகிறது. டிடெனியா பல கிராமத் தலைமைக்காரர் சனிக்கிழமை காலை சுமார் ஒரு மணிக்கு சுடப்பட்டு குருநாகலை ஆஸ்பத்திரியில் மரணமானார் என்றும் இது சம்பந்தமாக ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. பதுளை ஜில்லாவில் ஒரு பெண் குத்திக் கொல்லப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. அதுறுகிரியா, டெனியாய போலிஸ் பகுதிகளில் இரு கொலைகள் நடந்துள்ளன.

சிங்கக் கொடியை தேசியக் கொடியாகக வேண்டும்

அம்பலாங்கொடை நகர சபையில் தீர்மானம்

அம்பலாங்கொடை, அக். 22

அம்பலாங்கொடை அர்பன் சபையின் கூட்டமொன்று திரு ஏ. என். பியசேனா டி. சில்வா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. ஏ. பி. டி. வாஸ குணவர்த்தனா, சிங்கக் கொடியே இலங்கையின் தேசீயக் கொடியாக இருக்கவேண்டுமென்றும், அதனை தேசீயக் கொடியாக்கும்படி பார்லிமெண்டைக் கேட்டுக்கொள்வதாகவும் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

திரு. எஸ். ஓ. டி. சில்வா பேசுகையில் தாம் ஒரு சரித்திரப் புத்தகத்திலாவது சிங்கக் கொடி சிங்கள அரசர்களால் உபயோகிக்கப்பட்டதாக படிக்கவில்லையென்றும் சிங்களவர்கள் இரஹந்த கொடியையே (சூரியன் சந்திரன் பொறித்த கொடி) உபயோகித்துள்ளதாகவும் கூறினார். சிங்களவர்கள் பௌத்தர்களாக இருப்பதால் பௌத்த மதக் கொடியையே தேசீயக் கொடியாக்க வேண்டுமென திரு. ஏ. டி. லமாஹேவா கூறினார். இத்தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை வங்கியின் ஒரு கிளையை அம்பலாங்கொடையில் ஸ்தாபிக்கும்படி அவ்வங்கி டைரக்டர்களை கேட்டுகொள்வதாகவும், எல்லா பௌர்ணமி நாட்களையும் சர்க்கார் விடுமுறை நாட்களாக்கும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாகவும், கொழும்பு-காலி ரயில்பாதையில் செல்லும் டீஸல் ரயில் அம்பலாங்கொடை ஸ்டேஷனிலும் நிறுத்த வேண்டுமென்றும் உணவுப் பொருட்கள் மீதுள்ள அனாவசியமான வரிகளை நீக்கி வருடம் 10,000 ரூபாய்க்கு அதிகமான வருமானதை உடையவர்களுக்கு 100 சத விகித வருமான வரி விதிக்கும்படி சர்க்காரைக் கேட்டுகொள்வதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அச்சியந்திரங்கள் சம்பந்தமாக வழக்கு

கொழும்பு, அக். 23

கொட்டாஞ்சேனையைச்சேர்ந்த திரு. ஆர் ஜி பேஜ் என்பவர், கொழும்பு சாமேர்ஸ் கிரானரியைச் சேர்ந்த டபிள்யூ. டி. விக்கிரமரத்ன என்பவர் தமது அச்சடிக்கும் இயந்திர வகைகளைத் திருடிவிட்டதாகவும் அவற்றின் விலை மதிப்பு ரூ. 15,000 என்றும் கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் முன் விண்ணப்பம் செய்துள்ளார். விக்கிரமரத்தினா தமது இயந்திர வகைகளை மோசடி செய்துள்ளதாக திரு பேஜ் குற்றம சாட்டியுள்ளார். நீதிபதி இவ்வழக்கை நவம்பர் 4ம்தேதிக்கு ஒத்திவைத்துவிட்டு இந்த இடைக் காலத்திற்குள் கொட்டாஞ்சேனை போலிஸாரை இது சம்பந்தமாக ஒரு அறிக்கை அனுப்பும்படி தெரிவித்துள்ளார்.

பங்களாவிலிருந்து கார் திருட்டு

கையடையாளத்தின் மீது எதிரி கைது

கொழும்பு, அக் 23

கட்டுகாஸதொட்டையைச் சேர்ந்த எம். எம். டொன் டேவிட் என்பவருக்குச் சொந்தமான ரூ. 3000 மதிப்புள்ள ஒரு ஸ்டான்டர்ட் காரை 1945-ம் வருடம் நவம்பர் 27-ம் தேதி திருடியதாக பம்பலப்பிட்டியைச் சேர்ந்த எஸ். பி. ஜோன் அப்புஹாமி என்பவர் மீது குற்றம்சாட்டி பொரளை இரகசியப் போலிஸ பகுதியைச் சேர்ந்த சப் இன்ஸபெக்டர் ஜே. பி. தென்னக்கூன் ஒரு வழக்கை கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் முன் தாக்கல் செய்தார்.

1945 நவம்பர் 26-ம் தேதி கொழும்புக்கு வந்த திரு. டேவிட் அவரது காரை திரு. ஏ. ஆர். ஏ. ராஸிக்கின் பங்களாவில் இரவு விட்டுவைத்திருந்ததாகவும் மறுநாள் காலை கார் காணப்படவில்லையென்றும், போலிஸார் அக் காரை வெள்ளவத்தை ஹை ஸ்டிரீட்டில் கைவிடப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தனர் என்றும் அதில் இருந்த சில்லுகள் டயர்கள் முதலியன காணப்படவில்லையென்றும் அங்கிருந்த கையடையாளங்கள், கால் பாத அடையாளங்கள் முதலியனவற்றைக்கொண்டு எதிரியைக் கைது செய்ததாகவும் கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது. எதிரி மீதுள்ள குற்றச்சாட்டைத் தெரிவித்து வழக்கை நீதிபதி 30-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்

வற்புறுத்தி கையொப்பம் வாங்கியதாக வழக்கு

கொழும்பு, அக். 23

முகத்துவாரத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி பிரிட்ஜெட் அந்தோனி என்பவர் அவரது பௌத்திரி ஸ்ரீமதி அனியன் டி சொஸ்ஸா என்பவரையும், திரு ஒலிவர் ஜி. டி. சொஸ்ஸா ஆகிய இருவரும் தம்மை ஏமாற்றி வற்புறுத்தி ஒரு உறுதியில் கையொப்பமிடுவித்துள்ளதாகவும் இந்த உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துகள் ரூ. 1,50,000 பெறுமதி யுள்ளவை என்றும் அந்த உறுதியை செல்லுபடியாகாதென்று உத்தரவிட வேண்டுமென்றும் குற்றம் சாட்டி ஒரு வழக்கை தாக்கல் செய்திருந்தார். இவ்வழக்கு கொழும்பு அடிஷனல் ஜில்லாக் கோர்ட்டில் நீதிபதி திரு. என். சின்னதம்பிமுன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சாட்சியமளிக்கையில் தம்மை அவர்கள் எவ்விதம் ஏமாற்றி உறுதியில் கையொப்பம் வாங்கினர் என்றும் தம்முடைய சொத்துக்களின் விபரங்களையும் தெரிவித்தார். எதிரிகள் இருவரும் இக்குற்றச் சாட்டுகளை மறுத்து வழக்காளிதமது விருப்பத்தின் பேரிலேயே உறுதியை தயாரித்து கையெழுத்திட்டுக் கொடுத்ததாக கூறினார்கள். நீதிபதி மேற்கொண்டு விசாரணையை ஒத்திவைத்துள்ளார்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம்ஆண்டு அக்டோபர் மீ 23உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு! சுதந்திரன் அச்சுக் கூடத்தில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org